# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு மாசிமாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 5-ம் இலக்கம்


## "நாம் மௌனம்சாதிக்க முடியாது"

கொங்கோவில் வருடப்பிறப்பன்று நடந்த வேதபோதக குருமாரின் படுகொலைபற்றி பரிசுத்த பாப்பரசர் 23-ம் அருளப்பர் சென்ற 24-ந்திகதி அவர் அளித்த பகிரங்க பேட்டியின்போது அதிக மனவேதனையோடு பின்வருமாறு குறிப்பிட்டார்: "இந்த துக்ககரமான சம்பவத்தைப் பற்றி நாம் மௌனம் சாதிக்க முடியாது. எமது இருதயமே இப்போது பேசுகின்றது எமது கண்கள் கண்ணீர் சிந்தும்நிலையில் இருக்கின்றன. ஆதாமுக்கு காயீன் ஆபேல்என இருபுத்திரர்கள் இருந்தார்கள். மனுக்குலத்தின் ஆரம்பத்தில் நடந்தசம்பவமே இப்போது மீண்டும் நடந்துள்ளது. அதாவது, ஒரு சகோதரன் மற்றச் சகோதரனைக் கொலை செய்துள்ளான். ஆபேலுடைய இடத்தை இந்த வேதபோதக குருமார் வகிக்கின்றனர். இவர்கள் கொங்கோ நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு தங்கள் சொந்தநாடுகளையும் குடும்பங்களையும் துறந்தவர்கள்."

பாப்பரசர் சொற்பொழிவாற்றமுன் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் மத்திய ஆயத்த குழுவின் கூட்டத்திற்கென கூடியிருந்த கருதினல்மாரும் மேற்றிராணிமாரும், கொல்லப்பட்ட வேதபோதக குருமாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக "ஆண்டவரே! பாதாளத்தினின்று நான் உம்மைக் கூப்பிடுகிறேன்"என்ற செபத்தை ஓதினர்.

## வியற்னும் சிறுவரின் மெச்சத்தக்க விசுவாசம்

இளைஞர்கள் தமது வருத்தத்தைக் கவனியாமல் அதிகாலையில் எழுந்து நாட்பூசைக்குப்போவதைக் கண்டது எனக்கு உணர்ச்சிப் பெருக்கான ஒரு அனுபவமாயிற்று என "நம்பிக்கை" என்னும் அமெரிக்க வைத்தியசாலைக் கப்பலில் விசாரணைக் குருவாயிருக்கும் ஜோண் மக்னர் சுவாமிகள் கூறினர். ஒரு ஆண்டுவரை இக்கப்பலில் திருவூழியம் செய்யும் சுவாமிகள் தெற்கு வியற்னமுக்கு வந்தபொழுது அங்குள்ள கத்தோலிக்கர் சொற்பதொகையினராயினும் விசுவாசத்தில் உறுதியுள்ளவராயிருக்கக் கண்டார்.

வியற்னமில் திருச்சபை துன்பத்தை அனுபவித்தாலும் விசுவாசம் மக்கள் மனதில் ஆழமாய் வேரூன்றியிருக்கின்றது. 1954ல் ஏற்பட்ட ஜேனிவா ஒப்பந்தத்தின்பின் தெற்கு வியற்னமுக்கு வந்த 8லட்சம் மக்களில் பெரும்பான்மையினர் கத்தோலிக்கர். ஆகவே இங்குள்ள 15லட்சம் மக்களில் 10 விகிதத்தினர் கத்தோலிக்கராகின்றனர்.

சைகோன் பட்டணத்துக்கு வெளியே வழிநீளம் பல கத்தோலிக்க கோயில்களைக் காணலாம். அகதிகளில் அதிகமானோர் வடக்கேயிருந்து வந்து கோயில்பற்றுகவே தமது பங்குக்குருமாருடன் குடியேறியிருக்கின்றனர்.

### மறைவில்
## குருப்பட்டம் பெற்றனர்

ஹங்கேரிதேசத்துப் பொதுவுடமை அரசாங்கம் நடாத்தும் குருமடங்களைத் தவிர்ப்பதற்காக, தனிமையில் வேதசாஸ்திரம் படித்துத் தேறிய பல ஹங்கேரிய இளைஞர் குருத்துவாபிஷேகம் பெற்றிருக்கிறார்கள் என பெல்ஜியத்திலுள்ள பிறேமொன்ஸ்திற தென்சியன் மடத்திலிருந்து செய்தி எட்டியிருக்கிறது. இச்சிறு தொகையினரான குருமார் ஹங்கேரிதேசத்தில் விசுவாசத்தை மங்காது இருக்கப்பண்ணுவரென எதிர்பார்க்கப்படுகிறது. 1948ல் 1743 குருமாணவர் ஹங்கேரியின் குருமடங்களிலிருந்தனர். 1960ல் 300 பேர் மாத்திரமே இருந்தனர்.

## சேமக்காலைகளும் அரசாங்க உடமையாகின்றன

ஹவானவிலுள்ள கொலோன் சேமக்காலையை அரசாங்கசொத்தாக்குவதைத் தடுக்கும்படி கியூபாஅகதிகளில் நூற்றுக்கணக்கானோர் பரிசுத்த பிதாவிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். இச்சேமக்காலையில் சமாதிகள் அமைத்தும் பிரேதக்குழிகள் வாங்கியும் வைத்திருப்பவர்கள் தமது உரிமைப்பத்திரத்தை நேர்முகமாகக் காட்டவேண்டுமெனவும், காட்டாவிடில் அவை அரசாங்கத்திற்குச் சொந்தமாய் விடுமெனவும் காஸ்திறோவின் கட்டளையை அறிந்தபின்னரே இவ் விண்ணப்பம் அனுப்பப்பட்டது. சமாதிக்குழிகள் வைத்திருக்கும் அகதிகள் நேரடியாகச் சமுகமளிக்க முடியாதிருக்கிறது.

கியூபா ஆட்சியாளரின் உண்மை நோக்கமாவது "சமாதிக்கட்டிடங்களையிடித்துச் சலவைக்கற்களையும் கல்லறைகளில்உள்ள விலை உயர்ந்த பொருட்களையும் ரூஷியாவிற்கு ஏற்றுமதி செய்தல், அல்லது நாட்டிலேயே விற்று பொருளாதாரம் குலைந்துபோயிருக்கும் கியூபா ஆட்சிக்கு அவசியம் தேவையான பொருள் சேர்த்தல் ஆகும்.

இவ்வவமதிப்பைத் தடுக்கும்படி சீக்கிரம் செயலாற்றும்படி பாப்புவைக் கேட்டிருக்கின்றார்கள்.

## செக்கோஸ்லோவாக்கியாவில் துறவிகட்கு அநியாய தண்டனை

"செக்கோஸ்லோவாக்கியாவிலுள்ள தெய்வீகவார்த்தையின் சபையைச்சேர்ந்த 16துறவிகளுக்கு கொம்யூனிஸ்த அரசாங்கத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் பெரும்பாலானோர் குருக்களாவர். இவர்கள் ஏழுமாதங்களுக்குமுன் கைதுசெய்யப்பட்டு வத்திக்கான் சார்பாக உளவுபார்த்ததாகவும் பெரும்நிதிதிரட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பியதாகவும் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் பலவிதமாக வதைக்கப்பட்டு, பொய்க்குற்றச் சாட்டுக்களை ஒப்புக்கொள்ளுமளவிற்கு துன்புறுத்தப்பட்டு நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். வேறுபலகுருமாரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனல், அவர்களுடைய விசாரணை இன்னும் முடியவில்லை." இவ்வாறு திவ்வியவார்த்தையின் சபைவிடுத்தசெய்தி அறிக்கை கூறுகின்றது.

இஸ்பிரீத்துசாந்து சபையைச் சேர்ந்த ஒரு கன்னியாஸ்திரி திவ்வியவார்த்தையின் சபைக்குருமார் கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்குச் செல்ல உதவிபுரிந்ததாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு 7வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

செக்கோஸ்லோவாக்கியாவில் சிலகாலத்துக்குமுன் 428அங்கத்தினரைக் கொண்டிருந்த திவ்விய வார்த்தையின்சபை, இப்போது 100 அங்கத்தவரை மட்டும்தான் கொண்டுள்ளதென்றும் தெரியவருகிறது.

## தேவமாதாவைப் போற்றும் திரைப்படம்

தேவமாதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஒருதிரைப்படம் "ஞானசவுந்தரி"என்ற பெயருடன் மலையாளப்பாஷையில் வெளிவந்துள்ளது. இத்திரைப்படத்தையும், அதைத்தயாரித்தவரான திரு. கே. எஸ். சேத்துமாதவனையும் குயிலோன் மேற்றிராணியாரான அதிவந். பெர்னண்டெஸ் ஆண்டகை அவர்கள் வியந்து பாராட்டியுள்ளார். இப்படம் பரிசுத்ததேவஅன்னைக்குத்தகுந்த மரியாதை காட்டுகின்றது. இதன்மூலம் இந்தியமக்கள் தேவஅன்னையை அறிந்து அவளை அன்புசெய்வார்களென்று எதிர்பார்க்கின்றோம் எனக்குறிப்பிட்டார்.

## 2-ம் வத்திக்கான் பொதுச்சங்க ஆயத்தக்குழுவின் கூட்டங்கள்

இவ்வாண்டு கூட்டப்படவிருக்கும் 2 வது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு ஆயத்தங்கள் செய்யும்படி மத்திய ஆயத்தக்குழு 3-ம் முறையாக சென்றமாதம் 15-ம் திகதியிலிருந்து 23-ம்திகதிவரைகூடி ஆலோசித்தது. இக்கூட்டத்திற்கு 35 கருதினல்மார்களும், 2 பிதாப்பிதாக்களும், 14 அதிமேற்றிராணிமார்களும் வேறு அனேக நிபுணர்களும் சமுகமளித்தனரெனத் தெரியவருகிறது.

மத்திய ஆயத்தகுழுவின் கூட்டங்கள் வருகிறமாசி 19 தொடக்கம் 27 வரையும், பங்குனி 26 தொடக்கம் சித்திரை 3 வரையும், வைகாசி 3 தொடக்கம் 12 வரையும், ஆனி 11 தொடக்கம் 19 வரையும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆடியிலும் புரட்டாசியிலும் இக்குழுவின் கூட்டங்கள் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### ஞானோபதேசப் பயிற்சி நிலையத்

## திறப்பு விழா

இம்மாதம் 20-ந்திகதி கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாவந். தோமஸ்கூறே, ஓ. எம். ஐ. ஆண்டகை அவர்கள் அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் ஞானஉபதேசப் பயிற்சி நிலையத்தைதிறந்து வைத்தார். அப்போது இவ்வருடப் பயிற்சிக்கழகத்தில் சேர்ந்துள்ள 250ற்கு அதிகமான குருமார், துறவறசகோதரர்கள், கன்னியாஸ்திரிகள், சாதாரண கிறிஸ்தவர்கள் ஆகியோர் சமுகமாய் இருந்தனர்.

"இந்த மனிதன் பேசியதுபோல் வேறெந்த மனிதனும் பேசியதில்லை." இதுவே கிறிஸ்துநாதரைக் குறித்து அவர் சீவந்தராயிருந்தபோதே பொது மக்கள் கொண்ட அபிப்பிராயமாகும் என்று மகாவந். அதிமேற்றிராணி ஆண்டகை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் "கிறிஸ்தவ நற்செய்தியை மனுக்குலத்திற்கு அளிக்கும் பொறுப்பும் சிலாக்கியமும் எம்மைச் சார்ந்துள்ளது. இத்தொண்டை நிறைவேற்றுவதில் காலத்திற்கேற்ற விதமாகப் புதுப்புது முறைகளும், புதுப்புது உபகரணங்களும் கையாளப்பட்டு வந்துள்ளன. இவைகளையே ஞானஉபதேசக்கலை சிறப்பாக ஆராய்கின்றது. ஞானஉபதேசம் கற்பித்தல் உண்மையில் திருச்சபையின் போதகத் தொண்டைச் சார்ந்ததாகும்." பின்பு மகாவந். அதிமேற்றிராணி ஆண்டவர் அன்று ஆரம்பிக்கப்படுகின்ற ஞானஉபதேசப் பயிற்சி கழகத்தைப்பற்றியும், அதில் பங்குபற்றத்திரளாக அங்கு கூடியிருந்தவர்களையும்பற்றி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து, அடுத்த ஆண்டுகளில் இன்னும் அநேகர் அந்நிலையத்தில் சிறந்தஞான உபதேச ஆசிரியர்களாக பயிற்சிபெற வேண்டுமென்று தாம் விரும்புவதாக கூறித் தமது சொற்பொழிவை முடித்தார்.

அதன் பின்னர், அதிவண. பீற்றர் அ. பிள்ளை, அக்குவைனஸ் சர்வகலாசாலை அதிபர், மகாவந். அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்கள் ஞானஉபதேசப்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்ததற்காக அவருக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார். பின்பு வண. அன்ரனி பெர்னாண்டோ, ஓ. எம். ஐ. சுவாமிகள் தமது முதற் சொற்பொழிவை நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து அதிவண. பீற்றர் அ. பிள்ளை சுவாமியார் வேறொரு சொற்பொழிவாற்றினர்.

ஞானஉபதேசப் பயிற்சிக் கழகத்தின் ஏனைய சொற்பொழிவுகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை முறையாக நடைபெறும்.

### கல்கமுவா கத்தோலிக்க பாடசாலையின்

## பழைய மாணவர் சங்கம்

குருநாகல் பிரிவைச்சேர்ந்த கல்கமுவா றோமன் கத்தோலிக்க பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கடந்த 23-1-62 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்குத் திரு. டப்ளிவ். சி. அலெக்ஷாண்டர் லோவ் அவர்கள் தலைமையில் மேற்படி பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் "கிராமத்தின் வருங்கால முன்னேற்றம் வாலிபர்கையிலேயே தங்கியுள்ளது. வீண்பொழுது கழிப்பதையும், அனாவசியமான கருமங்களில் ஈடுபடுவதையும், கைவிட்டு மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்காகவும், பாடசாலையின் வளர்ச்சிக்காகவும், கிராமத்தின் அபிவிருத்திக்காகவும், மக்களின் சுபீட்ச வாழ்விற்காகவும், ஒற்றுமையாக ஒன்றுதிரண்டு ஊக்கத்துடன் உழைக்க முன்வர வேண்டு"மென்று கேட்டுக் கொண்டார்.

புதுவருடத்திற்கான நிர்வாகிகள்தேர்வில் திரு. டப்ளிவ். சி. அலெக்ஷாண்டர் லோவ் தலைவராகவும், திரு. பி. மடுத்தீன் உபதலைவராகவும், திரு. ஏ. பீ. சந்தியாப்பிள்ளை காரியதரிசியாகவும், திரு. பி. மனுவேல் தனாதிகாரியாகவும், திருவாளர்கள் பி. ஜோசப், ஏ. டொமினிக், பி. அகுஸ்தீன், எஸ். அந்தோனி, ஏ. ஜோசப் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும், ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாடசாலையின் முன்னேற்றம்கருதிக் கல்வி இலாக்காத்தலைவருக்கு சமர்ப்பிப்பதற்காகப் பின்வரும் முக்கிய தீர்மானங்களுட்படப் பலதீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (1) இப்பகுதிக்கே பழமையான தமிழ்ப்பாடசாலையாக விளங்கும் கல்கமுவா றோ. க. தமிழ்ப்பாடசாலையைச் சிரேஷ்ட பாடசாலையாக்கும்படி கனம். கல்வி அதிகாரியைக் கேட்டுக்கொள்வது. (2) இப்பாடசாலையில் எஸ். எஸ். ஸி. வகுப்பு வைக்க அனுமதி வழங்கும்படி கனம். கல்வி அதிபரைக் கேட்டுக்கொள்வது. (3) சிங்கள உதவி ஆசிரியர் ஒருவரையும், தமிழ் உதவி ஆசிரியரையும் இப்பாடசாலைக்குக் கூடியகெதியில் நியமனஞ் செய்துதவும்படி கனம். கல்வி அதிகாரியைக் கேட்டுக்கொள்வது.

மற்றும் பல விஷயங்களும் ஆலோசிக்கப்பட்டபின், காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் மாலை 6மணிக்குக் கூட்டம் கலைந்தது.

'நிருபர்'

---

**செய்திகள்தெரிவிப்போர் கவனிக்குக!**

எமது பத்திரிகைக்குக் கத்தோலிக்க செய்திகள்அனுப்புவோர், அவற்றைத் தங்கள் விசாரணைப் பங்குக் குரவருடைய அங்கீகாரத்துடன் அனுப்பவேண்டும். பங்குச் சுவாமியாருடைய அங்கீகாரம் பெறாத செய்திகள் பிரசுரிக்கப்படமாட்டா.

—ஆசிரியர்.

---

### வெள்ளைக்காரன் குடாவில்

## சவேரியார் இளைஞர் விவசாய கழகம்

கற்பிட்டிப் பிரிவைச்சேர்ந்த P| வெள்ளைக்காரன்குடா எனும் கிராமத்தில் 28-1-62ல் முதன்முதலாக 18 அங்கத்தவர்களுடன் இளைஞர்விவசாய க்ழகம் ஆசிரியர் A. E. ராஜக்கோன் அவர்களின் தலைமையில்ஆரம்பமானது. திரு. ராஜக்கோன், திரு. G. B. கிங்ஸ்லி டயஸ் போன்றவர்களின் பெருமுயற்சியினால் பின்தங்கிக்கிடக்கும் இக்கிராமத்திற்கோர் விடிவெள்ளியாக இக்கழகம் தொடங்கப்பட்டது.

கழகத்தின் நோக்கம்பற்றிப் பேசுகையில் ஆசிரியர் A. E. ராஜக்கோன் குறிப்பிட்டதாவது: "இக்கழகம் இங்கு மட்டுமல்ல, இதுபோன்ற எத்தனையோ கிராமங்களிற் தோன்றி வெற்றிகரமாகச் செயலாற்றுவதை நாம் நன்கறிவோம். இவற்றுக்கு ஆட்சிமன்றம் உதவியும் ஊக்கமும் அளிப்பதிலிருந்தே இதன் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. எனவே நாமும் ஒன்றுபட்டு ஒத்துழைப்போமேயானால் பின்னடைந்து கிடக்கும் நம் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு இக்கழகம் ஓர் வழிகாட்டியாக அமையு"மெனக் கூறினார்.

தொடர்ந்து திரு. G. B. கிங்ஸ்லி டயஸ் இளைஞர் விவசாய கழகத்தினால் விளையும் நன்மைகளை விளக்கிய பின்னர், கூறியதாவது: "கழகங்கள் பல தோன்றி காலத்தின் மாற்றத்துடன் மறைந்துவிட்ட பரிதாபநிலை இக்கழகத்திற்கு ஏற்படாவண்ணம், அங்கத்தவர்கள் தம் நலத்தை தமது கிராமத்தின்நலமெனக்கருதிப் பொறுப்புணர்ச்சியுடன் பூரண ஆதரவு தரவேண்டு"மெனக் கூறினார்.

கழகத்தின் ஒழுங்குவிதிகள், சந்தா விபரம், ஆதியனபற்றித் தற்காலிக தலைவரான ராஜக்கோன் அவர்களால் விளக்கப்பட்டது.

பின்னர், இக்கழகத்திற்கு "சவேரியார் இ. வி. கழகம்" எனப் பெயர் வைப்பதெனவும், அடுத்த கூட்டம் 11-2-62ல் கூட்டப்படல் வேண்டுமெனவும், கழக உத்தியோகத்தர் அன்று தினம் தெரியப்பட வேண்டுமெனவும் அவையோரால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் சபை கலைந்தது.

---

### நுவரேலியாவில்

## திருவழிபாட்டுத் தினம்

கடந்த ஞாயிறுவாரம் 28-1-62-ல் நுவரேலியா விசாரணைப்பங்கில் திருவழிபாட்டுத்தினம் அனுட்டிக்கப்பட்டது. கண்டி தேசீய குருமடத்தின் திருவழிபாட்டியக்கத்தலைவரான வண. மைக்கல் றொட்றிக்கோ, ஓ. எம். ஐ. சுவாமியவர்கள் முன்னின்று நிகழ்ச்சிகளை நடப்பித்தார். மேற்படி திருவழிபாட்டுத்தினம் நுவரேலியா விசாரணைப்பங்கு கத்தோலிக்க சேவாசங்கத்தின் ஆதரவில் பங்குக்குரவர் வண. டி. எம். சேவியர், ஓ. எஸ். பி. அவர்களது மேற்பார்வையில் புனித சவேரியார்ஆலயத்தில் நடந்தேறியது.

ஞாயிறன்றுகாலை 7-00மணிப் பூசையுடன் திருவழிபாட்டுத்தினம் ஆரம்பமாயிற்று. திவ்விய பூசைதான் திருவழிபாட்டுத்தினத்தின் முக்கிய விடயமாகும். விசுவாசிகள் திவ்விய பூசையை பத்தியாக மதித்து, அதன் உண்மைப்பொருளையும் அதன் மேன்மையையும் நன்குணர்ந்து தக்கமுறையாக அதில் பங்குபற்றச் செய்வதே இத்தினத்தின் குறிக்கோளாகவிளங்கியது.

திருவழிபாட்டுத் தினத்தின் உண்மைப்பொருளையும், அத்தினம் கூறும் செய்தியையும் நன்கு விளங்குவதற்கு இஸ்பிரீத்துசாந்துசருவேசுரனின் உதவியை வேண்டித் திவ்வியபூசைஆரம்பமாகியது. பூசையின் விளக்கம் ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெற்றது. தமிழில் நிருபமும் சுவிசேஷமும் மற்றும் தியானமும் இடம்பெற்றன. திருவழிபாட்டுத்தினச் செய்தியின் சாரம் சிங்களத்தில் உரைக்கப்பட்டது

ஞாயிறுகாலை 9-00மணிப் பூசையில் விசேஷ அம்சங்கள் இடம்பெற்றன. காணிக்கைச் சுற்றுப்பிரகாரம் விசுவாசிகளைக் கவர்ந்தது. ஆங்கிலத்தில் பூசை விளக்கமும் பிரசங்கமும் நடந்தேறின. வண. மைக்கல் றொட்றிகோ அடிகளார் 'கடவுள்பயம்'பற்றி மிகவும் தெளிவான பிரசங்கம் செய்தார். பூசை ஆரம்பத்தில் திவ்விய பூசைக்கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறதென்றுகாட்ட "விசுவாசிகளின் கருத்துக்கள்" அடங்கியபெட்டி பீடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

காலை 10-00மணிக்கு இளைப்பாற்றி மாதா கன்னியர்மடத்தில் திவ்விய பூசைபற்றிய சிறியதோர் பொருட்காட்சியும் இடம்பெற்றது. அங்கு தானே சல்லாப நிகழ்ச்சிகளும் நடந்தேறின. "திவ்வியபூசையில் பங்குகொள்ள வேண்டியது ஏன்?" என்னும் விடயம் ஆராயப்பட்டது. இவ்விடயம்பற்றி வண. மைக்கல் றொட்றிக்கோ சுவாமிகள் அருமையான உரை நிகழ்த்தினர்.

அவர் தமது உரையில் இத்திருவழிபாட்டுத்தினம் திவ்வியபூசையின் முக்கிய பகுதிகளுக்கு விசேஷ கவனஞ் செலுத்தி, விசுவாசிகளுக்கு அவற்றை வலியுறுத்தி விளக்குவதையே நோக்கமாகக் கொண்டது என்றார்.

மேலும், திவ்விய பூசையைப் பற்றி அவர் விபரிக்கையில், தவ்வியபூசையின் ஆரம்பத்தில் கிறிஸ்துநாதரை நாம் எமது இரட்சகராக ஏற்றுக்கொள்கிறோம். பரமண்டலமந்திரம் கிறிஸ்தவர்களுடைய சகோதரத்துவத்தை மிகவும் தெளிவாக்குகின்றது. யேசுநாதர்தாமே கற்றுக்கொடுத்த இச்செபத்தை நாம் பரமபிதாவின் முன்னிலையில் அவரது பிள்ளைகளாக நின்று மன்றாடும்பொழுது எமது கிறிஸ்தவ சகோதரத்துவத்தை அப்படியே வெளிப்படையாக காட்டுகின்றோம். நாஸ்திகர்களும் உலோகாயத வாதிகளும் கூட சகோதரத்துவத்தைப் போதிக்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவ சகோதரத்துவம் தெய்வீக சக்தியும் வலிமையும் கொண்டது என்றார்.

திவ்வியபூசை எம்மைப் பரிசுத்தப் படுத்துகின்றது — எமது ஆன்மாவை மட்டுமல்ல கீழ் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்ட [illegible] சுத்தமாக்குகின்[illegible] எமக்கு வேண்டிய அத்தனையையும் எமது தொழில் துறைகள், எமக்கென்று இறைவன் படைத்த எல்லாவற்றையுமே பரிசுத்தமாக்குகின்றது.

திவ்வியபூசையில் நாம் கொடுக்கும் காணிக்கைப்பொருள் நமது நேசஇரட்சகராக எமக்கு மாற்றி அளிக்கப்படுகின்றது. திவ்வியபூசையில் காணிக்கை வைக்கப்படும் அப்பம் நாணயங்கள் போல வட்டமாய் இருப்பதன் கருத்து காணிக்கையாக்கப்படும் நாணயங்களை ஞாபகப்படுத்துவதாகும்.

தேவாலயத்தில் ஒருமித்துப் பாடுவதும் கிறிஸ்தவசகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் காட்டுகிறது. பூசை ஆரம்பத்தில் பாடிக்கொண்டு கோவிலுக்கு ஊர்வலமாய் வருவது பண்டைக் கால வழக்கம். இறைவனைத் துதிப்பதும், செபிப்பதும், ஒற்றுமையை வலியுறுத்துவதுமாகிய மும்முனைநோக்கம் கோவில் பாடலில் உண்டு. இன்று மக்கள் கோவிலில் பாடுவதில்லை. அதனால் ஐக்கியம் குலைந்துபோகிறது, என்[illegible]. இவரது உரையின் [illegible] திருத்தசனங்கள் சிங்களம் தமிழ், ஆங்கிலம் என்னும் சிறு குழுக்காகப் பிரிந்து, கொடுக்கப்பட்ட வினாக்களை விவாதித்தனர்.

திவ்வியபூசையில் எவ்வாறு பங்கு கொள்ளவேண்டும், எவ்விதஆயத்தங்கள் செய்யவேண்டும், தகுதியற்ற முறை யாது, அதிக ஆன்ம நன்மை தரக்கூடிய தகுந்த முறை என்ன? என்பனபற்றியே சல்லாபமும், குரவரின் விளக்கமும் இடம்பெற்றது. ஞாயிறுமாலை 4-00மணிக்கும் 'கேள்வி நேரம்' என்னும் தலைப்பில் விசுவாசிகள் எழுப்பிய ஐயங்கள் தீர்த்துவைக்கப்பட்டன.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## மரணதண்டனையை நிறுத்துக

நிகழும்மாசிமாதம் 17-ந்திகதியன்று சோமராமாவின் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படவேண்டியது. ஆனால், இதனை நிறுத்திவைக்குமாறு அவரின் சிரேஷ்ட நியாயவாதியான திரு. லூசியா வீரமந்திரி கவர்னர்-ஜெனரலுக்கும், நீதிமந்திரிக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். இதற்குக் காரணம், கிறிமினல் அப்பீல் கோட்டின் தீர்ப்பை எதிர்த்துப் பிறிவிக் கவுன்சிலுக்கு அப்பீல்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதேயாகும்.

## சுதந்திரதினக் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டது

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதித்திட்டம் ஒன்றைக் குறிப்பிட்ட சில உயர்தர பொலிஸ், இராணுவ அதிகாரிகள் செய்தார்களென்று சொல்லப்பட்டதைத் தொடர்ந்து அனுராதபுரத்திலே பெரிதும் ஆடம்பரமாகக் கொண்டாடப்படவிருந்த சுதந்திரதின விழாக்கொண்டாட்டத்தை நீக்கிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொழும்புநகருக்கு வெளியிலுள்ள பட்டினம் ஒன்றிலே — அதாவது அனுராதபுரத்திலே சுதந்திரதினவிழா கொண்டாடப்படவிருந்தமை இதுவே முதன்முறையாகும்.

## அரசாங்கத்தைக்கவிழ்க்கச் சதித் திட்டம்

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதித்திட்டம் ஒன்றைச் செய்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரிலே உயர்தர பொலிஸ், இராணுவ அதிகாரிகளும், பிறரும் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. அவசரகால சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள இவர்களின் நாமங்கள் வருமாறு: (1) திரு. சி. சி. திசநாயக்கா, உதவிப் பொலிஸ் இன்பெக்றர் – ஜெனறல். (2) திரு. ஜோண் புள்ளே, உதவிப் பொலிஸ் சுப்பிறின்ரன். (3) திரு. எல். சி. ஜீரசிங்க, உதவிப் பொலிஸ் சுப்பிறின்ரன். (4) கேணல் மோறிஸ் டி மெல், இராணுவம். (5) கேணல் எல். சி. டி சேறம். (6) திரு. சிட்னி டி சொய்சா, முன்னைநாள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்றர் – ஜெனறல். (7) லெவ்ரினண்ட் கேணல் பி. ஆர். யேசுதாசன்.

## ஜி. சி. ஈ. பரீட்சையும் வயதும்

பொதுத் தாராதரப் பத்திர பரீட்சை (ஜி. சி. ஈ.)க்குரிய கடைசிவருட வகுப்பில் மாணவர்கள் எத்தனை வருடம் இருந்து, எத்தனை முறை பரீட்சையெடுத்தபோதிலும் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருந்தால் அவர்களை வகுப்பிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படாதென்று கல்விப்பகுதி இப்போது முடிவுசெய்திருக்கிறது. ஆனால், மும்முறை பரீட்சை எடுத்து, இருவருடம் அதேவகுப்பில் தங்கியுள்ள பதினாறு வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அப்பரீட்சைக்குரிய கடைசிவகுப்பிலே வைத்திருக்கப்படமாட்டார்கள். இன்னும் எச். எஸ். சி. வகுப்பில்லாத பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் உயர்தர கல்விபயில வரும்போது அவர்களை அருகாமையிலே அவ்வகுப்புகளுள்ள பாடசாலைகளில் வயது எல்லையைப் பாராது தேவைப்படும் கல்வித் தாரதம் இருந்தால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் கல்விப்பகுதி முடிவு செய்துள்ளது.

## சுதந்திரதின விடுமுறை

சுதந்திரதினவிழா சம்பந்தமாய் இம்மாதம் 5-ந் திகதியாகிய வருகிற திங்கட்கிழமை அரசாங்க-வங்கி விடுமுறை நாளாகப் பிரகடனஞ்செய்யப்பட்டுள்ளது.

## கச்சேரியின் இடமாற்றம்

இதுவரை "கமிஷனர்ஸ் இல்ல"த்தில் இருந்துவந்த திரிகோணமலைக் கச்சேரி சென்ற 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை முதல் திரிகோணமலை பிறெடறிக் கோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

## உருளைக்கிழங்கின் விலை

ஒருஇருத்தல் உருளைக் கிழங்கின் விலை தற்போது 23 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்றவருடம் மார்கழி மாதம் 15-ந் திகதியிலிருந்து 26 சதமாக விற்பனைசெய்யப்பட்ட ஒருஇருத்தல் உருளைக்கிழங்கின் கட்டுப்பாட்டு விலை சென்ற 12-ந் திகதியன்று 18சதமாகக் குறைக்கப்பட்டிருந்து இப்போது 23 சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

## கூடிய சாராய விற்பனை

சாராய விலை குறைக்கப்பட்டபின் அதன் விற்பனவு மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற மார்கழியில் 2இலட்சத்து 2ஆயிரத்து 648கலன் சாராயம் விலைப்பட்டுள்ளது. ஆனால், இதற்குமுந்திய 1960-ம் ஆண்டின் மார்கழியிலே விலைப்பட்டசாராயம் 1 இலட்சத்து 38 ஆயிரத்து 550 கலன் மாத்திரமே. ஆகவே, சென்ற மார்கழியில் சாராய விற்பனை 46 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

## இரண்டுகோடி ரூபா கடன்

அரசாங்கம் மேலும் இரண்டுகோடி ரூபா கடன் எடுக்கின்றது. இந்தக் கடன்பணம் சென்ற வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட செலவுக்கேயாகும். இப்பணம் 1987-ம் ஆண்டு நாலரைவிகித வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும். ஆயினும், ஆறுமாத முன்னறிவித்தல் கொடுத்தால் 1983-ம் ஆண்டுமுதல் அது திரும்பக் கொடுபடலாம். கடன்கொடுத்தோர் ஒவ்வொரு ஆறுமாதமும் தங்கள் பணத்துக்கு நாலரைவிகிதவட்டி பெற்றுக்கொள்வர். இந்தக் கடன்பணத்தை இந்த மாசி மாதம் 1-ந் திகதியிலிருந்து 28-ந்திகதி வரை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவிருக்கிறது.

## தமிழ்ச் சர்வகலாசாலை

திரிகோணமலையிலே உப்புவெளியிலுள்ள நூறுஏக்கர்காணியில் அமைக்கப்படவிருக்கும் தமிழ்ச்சர்வகலாசாலை விவசாய பயிற்சிக் கட்டடவேலையின் முதலாவது கட்டம் இப்போது பூர்த்தியாகின்றது. வருகிற ஆடிமாதத்துள் இந்தவேலையின் முழுக்கட்டமும் முடிவடைந்ததும் விவசாயப் பயிற்சிவகுப்புகளை ஆரம்பிப்பதென்றும், ஆரம்பத்திலே இவ்வகுப்புகளில் ஐம்பது மாணவர்களையே சேர்ப்பதென்றும் நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது. இவ்வகுப்புகளில் ஈடுபடும் விரிவுரையாளர், பேராசிரியர், மாணவர்கள் தங்குவதற்கான விடுதிகளை அமைக்கும் வேலையும் அடுத்தமாத இறுதியிலே முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சிவகுப்புகள் நடத்துதற்கான பல வகுப்பறைகளும் கட்டப்படுகின்றன. விவசாயப் பயிற்சிவகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டபின்னரே மீன்பிடித் தொழில்முறை, தொழில்நுட்பத்துறை, பொறியியல் வகுப்புகள் [illegible] மென்று சொல்லப்படுகிறது.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே முதலாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு வருகிறமாசிமாதம் 12-ந் திகதி திங்கட்கிழமை யாழ்நகரமண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. நீதியாசர் டக்றர் எச். டபிள்யு. தம்பையா, கியூ. சி. அவர்கள் விசாரணை நடத்தவிருக்கின்றார்.

## மேலும்ஒரு நீதிபதி

யாழ்ப்பாண மஜிஸ்ற்றேற் கோட்டில் வேலைகள் அதிகமாயிருப்பதாலும், வழமையிலும் அதிகநேரம்தங்கியிருந்து நீதிபதி விசாரணை நடத்தவேண்டியிருப்பதாலும், இன்னும் யாழ்ப்பாண நீதிபதி வாரந்தோறும் இரண்டுநாள் ஊர்காவற்றுறைசென்று கோடு நடத்திவருவதாலும் யாழ்ப்பாணத்திற்கு மேலும் ஒருநீதிபதி நியமனஞ்செய்யப்படுவாரெனத் தெரியவருகிறகிது.

## ஆபாசப் புத்தகங்கள் விற்றவர்

சன்மார்க்க கெடுதிக்குரிய ஆபாசப் புத்தகங்களை விற்ற குற்றத்திற்காக மருதானையைச்சேர்ந்த ஒரு புத்தக வியாபாரியான என். பி. அந்திரேயாஸ் அப்புகாமிக்குக் கொழும்புப் பிரதம மஜிஸ்ற்றேற் கோட்டில் சென்றவியாழக்கிழமை ஒருமாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. எதிரி தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டார்.

## சிங்கள பஸ்கண்டக்றர்கள்

யாழ்ப்பாணப்பகுதியிலே கடமை பார்ப்பதற்கென்று அனுப்பிவைக்கப்பட்ட சிங்கள பஸ்கண்டக்றர்கள் யாவரும் திருப்பி அழைக்கப்பட்டுவிட்டார்கள். இவர்கள் சிலமாதகாலம் மட்டுமே இங்கு கடமைபார்க்க முடிந்தது. தாங்கள் அறியாத மொழியில் அவர்கள் தங்களுடன் கடமைபார்ப்பதாயும், திக்கெற் எழுதுவதாயும் பிரயாணிகள் அதிருப்தி தெரிவித்துவந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

## நாளொன்றுக்குப் பத்து

திருத்துவதற்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள் இல்லாமையால் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் இரத்தினபுரி டிப்போவிலே இன்று 20 பஸ்கள்வரை காரச்சிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றிலே சில பஸ்கள் நான்கு மாதங்களுக்குமேல் இருந்துவருவதாகத் தெரியவருகிறது. இரத்தினபுரி டிப்போவிலே எல்லாமாக 68 பஸ்கள் உள்ளன. இவற்றிலே தினமும் சராசரியாய்ப் 10 பஸ்கள் வீதம் பழுதடையத் தவறுவதில்லை.

## வவுனியா றெயின் விபத்து

வவுனியாவிலே கொழும்பு–காங்கேசன்துறை இரா றெயில்வண்டியைக் கவிழ்த்துப் பிரயாணிகளில் ஒருவருக்கு மரணமும், பலருக்குக் காயமும் விளைத்ததாகவும், இருவரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு குருநாகல் சுப்பிறீங்கோட்டிலே பலநாள் விசாரணை செய்யப்பட்டு முதலாம் எதிரியான டிங்கிறிபண்டா மூன்று குற்றச்சாட்டுகளின்பேரில் 20 வருடக் கடூழிய சிறைத்தண்டனையும், இரண்டாம், மூன்றும், நான்காம் எதிரிகளான பீற்றர் பியதாசா, விஜயக்கூன் குணபாலா, வீரசேகரா சைமன் ஆகியோர் மூன்று குற்றச்சாட்டுகளின்பேரில் 12 வருடக் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளனர். ஐந்தாம் எதிரியான [illegible] விடுதலையடைந்தான்.

## வெளிநாட்டுச் செய்திகள்

● இமயமலையைச்சார்ந்த நேபாள இராச்சியத்தை 1955-ம் ஆண்டிலிருந்து ஆட்சிசெய்துவருகிறவரான 41வயதுடைய மகேந்திரமன்னர் பயணஞ்செய்தகார்மீது குண்டுஒன்று வீசப்பட்டபோது தேவாதீனமாக அவர் உயிர்தப்பிக்கொண்டார். கிழக்கு நேபாளத்திலே இச்சம்பவம் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

● சென்ற1961-ம்ஆண்டின் பிற்பகுதியில் ருஷியாநடத்திய அணுக்குண்டுப்பரீட்சைகள் அணுச்சக்தித் துறையிலே அதனைமுன்னேறச் செய்திருக்கிறது; ஆயினும் பொதுவாக அத்துறையில் அமெரிக்காவே இன்னமும் முதலிடம்வகித்து வருவதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரிகாரியாலய உதவிக்காரியதரிசி திரு. ரோஸ்வல் கில்பற்றிக் தெரிவிக்கின்றார்.

● ருஷியாவின் இரண்டாவது வானவெளி வீரரான மேஜர் கொமன் ரிற்றேவ் அன்று ஞாயிற்றுக்கிழமை றங்கூன்நகரில் பேசியபோது: சந்திரமண்டலத்திற்கு மனிதன் எப்பொழுது செல்வான் என்பதுபற்றி என்னால் கூறமுடியாது; அங்கு செல்லும் முதல் மனிதன் ஒரு ருஷியனாக இருப்பான்; நான் ஒருநாள் சந்திரனைச் சுற்றிப் பார்க்கப் போவேனென்று நம்புகிறேனெனக் கூறியிருக்கின்றார்.

● மலாயாவிலுள்ள சீன ஏரியின் அடித்தளத்திலே ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்து அழிந்துபோனதாகச் சொல்லப்படும் நகரம் ஒன்றைப் பற்றிய சின்னங்கள் ஏதாவது உண்டா என்பதை ஆராயச் சிங்கப்பூரிலுள்ள றோயல் விமானப்படையைச் சேர்ந்த இருபதுவீரர் முன்வந்துள்ளனர். செயற்கைச் சுவாசப்பைகளின் உதவியோடு இவர்கள் அந்த ஏரியின் அடித்தளம் மட்டும் சென்று பார்க்க முனைந்துள்ளார்கள்.

● இத்தாலிய சர்வாதிகாரியான காலஞ்சென்ற சிஞ்ஞோர் முசோலினியின் புதல்வரும், ஜாஸ் பியானோ வாத்தியம் மீட்டுகிறவருமான றோமானோ முசோலினி வருகிற பங்குனிமாதம் 3-ந் திகதியன்று சினிமாநடிகையான சோபியா லோறெனின் சகோதரியாகிய மரியாவை விவாகஞ்செய்யவிருக்கின்றார். இந்தவிவாகம் அங்கே பிறெடப்பியோ எனுமிடத்திலே பிரான்சிஸ்கன்சபைக் குருமாரால் விசாரணைசெய்யப்படும் கோவில் ஒன்றில் நடந்தேறவிருக்கின்றது.

## பிரதமரின் வேண்டுகோள்

அரசாங்கபகுதிகளின் தலைவர்களும், கார்ப்பறேஷன்களின் நிர்வாகிகளும் தங்கள் காரியாலயங்களுக்குத் தேவைப்படும் தளபாடங்கள், கம்பளங்கள் ஆதியன கூடியவரை உள்ளூரில் செய்யப்பட்ட பொருட்களாய் இருக்கின்றனவா எனப் பார்த்துக்கொள்ளுமாறு பிரதமர் சிறிமா தனது மந்திரிகளைக் கேட்டு, "நாம் உற்பத்திசெய்யும் பொருள்களை உபயோகிப்பதிலே பெருமைப்படவேண்டு"மெனக் குறிப்பிட்டிருக்கிறார்.

## அரிசிப்பங்கீட்டுப் புத்தகம்

நிரந்தரமான அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் ஒன்றை வழங்ககூடிய ஒரு திட்டம் இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறதென்றும், இத்திட்டம் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தில் நடைபெறும் மோசடியைத் தவிர்க்குமென்றும் இந்த மோசடிபற்றி விசாரணைநடத்திவரும் குழு அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறது. இதுவிஷயமாய் அரசாங்கம் ஒருமுடிவு செய்யும்வரை அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் ஆறுமாதகாலத்துக்குமட்டுமே செல்லத்தக்கவையாய் வழங்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மாசிமாதம் — 1962

4 ஞா. 1 **லங்காமாதாதிருநாள்**—பிரத்தியட்சத்தின்பின் 5-ம்ஞாயிறு (தேவமாதாவின் அமலோற்பவபூசை; ஞாயிறின் ஞாபகம்) வெ.
5 தி. அர்ச். ஆகத்தம்மாள் சி.
6 செ. அர்ச். தீத்துஸ் அப்பர் (அர்ச். டொரோத்தி அம்மாள் ஞா.) வெ.
7 பு. அர்ச். ரோமு வால்டப்பர் வெ.
8 வி. அர்ச். மாத்தா அருளப்பர் வெ.
9 வெ. அர்ச். சிறிலும், மெதோடியுசும் வெ.
10 ச. அர்ச் ஸ்கொலாஸ்திக்கம்மாள் வெ.

சத்திய வேத
**பாதுகாவலன்**
1962-ம் ஆண்டு
மாசிமாதம் 4-ந் திகதி

## குரூரத்தனமான கொலைபாதகம்

ஆபிரிக்க கொங்கோவிலே, கடங்கா நாட்டைச்சேர்ந்த கொங்கோலோ பட்டினத்திலே சென்ற புதுவருடப் பிறப்புத்தினமன்று குருமாரான கத்தோலிக்க மிஷனரிமாரும், பிறரும் மனுத்தன்மையற்றவிதமாய், காட்டுமிருகாண்டித்தனமாய் கொன்றழிக்கப்பெற்ற பயங்கரசம்பவம்பற்றிய பிந்தியசெய்திகளைப் படிக்கும்போது, இற்றைக்குச் சுமார் இரண்டு அல்லது மூன்று நூற்றூண்டுகட்குமுன் நாகரீகமற்றிருந்த ஆபிரிக்கபழங்குடிகள் அப்போது செய்துவந்த குரூரத்தனமான கொடுஞ்செயல்களையே ஞாபகப்படுத்துகின்றன. கம்யூனிஸ்த ஆதரவாளனும், அங்குநிகழ்ந்த படுகொலைகளுக்கும், பயங்கரவாதத்துக்கும் ஆதிகாரணனுமான அன்ரோய்னி கிசென்காஎன்பவனின் ஆதிக்கத்திலே ஆவேசமூட்டப்பட்ட கொங்கோலிய கலகப்படைகளும், அவைகளுடன் கூடிக்கொண்ட "காட்ரெல்" எனப்படும் இயக்கத்தைச்சேர்ந்தவாலிப பைசாசகுழாங்களும் கொங்கோலோவிலே பயங்கரவாதத்தை உண்டுபண்ணிச் சகலரையும் திகில்கொள்ளவைத்து நாம் முன்னர் அறிவித்திருந்ததுபோலப் 19குருமாரையல்ல, ஆனுல். 22குருமாரை அந்தோ! ஈனவிரக்கமின்றிக் கண்டதுண்டமாக வெட்டியும், அவர்களின்கரங்களைத் தறித்தும், கண்களை விரல்நகங்களால் தோண்டியெடுத்தும், சடலங்களிலே அம்புகள்கொண்டுஎய்தும், குருதிவேட்கை கொண்டனவாய் "உங்கள் இரத்தத்தைப் பிழிந்தெடுப்போ"மென அறைகூவிக்கொண்டும் செய்துள்ள பலவித அட்டூழியங்களைப்பற்றி அறியவரும்போது எவர்மனந்தான் பதையாதிருக்கும்! எவர்உளந்தான் பக்கிடாதிருக்கும்!

அன்று கொங்கோலோவிலே மிஷனரிமார் சங்காரத்தின்போது உயிர் தப்பிப் பிழைத்துக்கொண்ட ஒரேயொருகுருவரான வண. ஜூல்ஸ் டார்மண்ட்சுவாமியார் சுடப்படுவதற்குத் தம்முடையமுறைவந்ததும் கலகத்தில்இறங்கிய கொங்கோலிய படைவீரர்களில்ஒருவன் தம்மை எவ்வாறு காத்துவைத்தான் என்பதைப்பற்றித் தெரிவித்திருப்பது வருமாறு: "அமரிக்கையாய்இரும்; நான்உம்மைத் தப்புவிக்க விரும்புகிறேன்" என்று கூறிக்கொண்டே அந்தப்போர்வீரன் என்னைச் சிறைச்சாலைச் சிற்றறைஒன்றில் அடைத்துவிட்டான். முதலில்நான் மற்றிரு மிஷனரிமார்களுடன் ஓர்அறையில் அடைத்துவைக்கப் படவிருந்தேன். ஆனுல், இந்தச்சிற்றறையில் ஆட்கள் மிதமிஞ்சி யிருக்கிருர்களென்று சொல்லிக்கொண்டு அதிலிருந்து அவன்என்னை வெளியேஇழுத்தான். அதன்மேல் நான் தனிச்சிற்றறை ஒன்று கொடுக்கப்பட்டேன். அதிலிருந்து நான் வெளியேகொண்டுபோய்ச் சுடப்படவேண்டிய முறை வந்தபோது அந்தப்போர்வீரன், "நிலவறைக்கா போகின்றீர்கள்; ஆனுல், சோம்பேயின்போர்வீரர்களை மிஷனரிமார் அங்கேயன்றோ மறைத்துக்கொண்டிருக்கிருர்கள்; அங்கேபோனுல் நீங்கள் அவர்களைக் கண்டுகொள்வீர்கள்" என்று கதறினுன். பின்னர் இங்கேபடைவீரர் எவருமில்லை; அதனுல் அமைதியாய் இரும்; "நான்உம்மைத் தப்புவிக்க விரும்புகிறேன்"என்று அவன்கழறினுன். அதன்மேல் என்னைத் திரும்பவும் அந்தச்சிற்றறைக்குள் தள்ளிவிட்டான். பிந்த ஏனையபோர்வீரர் என்னைத் தனிமையாகவிட்டுப் போயினர். ஐரோப்பியமிஷனரிமாரை அந்தப்போர்வீரர் கசைகள் கொண்டு அடிக்கத்தொடங்கியபோது, தங்களையும் அடிக்குமாறு வலிந்துகேட்டுநின்ற இருகொங்கோலியகுருமாரின் வீரத்துவம் புகழ்ந்து பாராட்டத்தக்கது. கொங்கோலியமக்கள் அநேகர் கொல்லப்பட்டார்கள். ஆனுல், எத்தனைபேரென்று என்னுல்சொல்லிக் கொள்ளவியலாது."

"இந்தக்கலகப்படைகளின் தலைவரான கேணல் அல்போன்ஸ்பகாஸா மறுநாள் அங்குவந்துசேர்ந்தபோது, கொலைசெய்யப்பட்டமக்களின் சடலங்களை உடனேதானே புதைக்கும்படி கட்டளையிட்டார். இந்தச் சங்காரங்களையிட்டுக் கோபமடைந்தார்போல் அவர் காணப்பட்டார். அவர் அங்கிருந்தால் இவைகள்நேர்ந்திருக்கமாட்டாவென்று நான்உணர்ந்துகொண்டேன். கொங்கோலோவுக்குச் சமீபமான லுபண்டாஎன்ற மற்றோர்மிஷனும் தாக்கப்பட்டது. பற்றைக்காட்டினுள் தப்பியோட முயன்றபோது அநேககுருமார் காயமடைந்தனர். பிந்த இவர்கள் கசொங்கோவிலுள்ள வெள்ளைக்குருமாரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள்" என்பதே. நிற்க, இந்தச்சங்காரம்நிகழ்ந்த கொங்கோலோ பட்டினத்துக்கு விமானம்ஒன்றிலே பறந்துசென்ற மேஜர் டிக் லோசன்என்ற பிரித்தானியஅதிகாரி அங்கு ஒரேயொருவராய் உயிர்தப்பிய வண. ஜூல்ஸ் டார்மண்ட் சுவாமியாரைத் தன்னுடனஅழைத்துக்கொண்டு லெயோப்போல்ட்வில் நகருக்குத் திரும்பியிருக்கிருர். அங்கேநடைபெற்ற எரியூட்டுதல்களையும், மற்றும்அட்டூழியங்களையும் பற்றிச் சிந்திக்கும்போது எவர்மனமும் உருகாதிருக்கமாட்டாது. கிசென்காவும், அவனுடைய இடதுசாரி ஆதரவாளர்களும் கொங்கோவிலே எந்தவிதமான கம்யூனிஸ்த திருவிளையாடல்களும் நடத்தாது ஐக்கியநாடுகள் சபை கட்டுப்படுத்துமிடத்துத்தான் புதிதாகச் சுதந்திரமடைந்த அந்நாடு சுபீட்சமடையுமென நம்பியிருக்கலாம்.

---

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். செயற்கைமுறைகளைப் பயன்படுத்தினுல் அது மனித குணத்தின் தற்கொலையாகும்.

—காந்தியடிகள்

# லங்கா மாதா திருநாள்

—வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள்—

தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

### இன்றைய பூசையின் சாரம்

இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையாய் இருக்கின்றது. ஆனுல், எங்களுடைய நாட்டின் பாதுகாவலரான "லங்கா மாதா" திருநாள் ஆனபடியினுல், நாங்கள் இத்திருநாளைக் கொண்டாடுகிருேம். இலங்கை என்ருல் ஒளிவீசுதல் என்று அர்த்தமாகும். எனவே, தேவதாய் ஒளிவீசுதலின் பாதுகாவலர் என்ருல், அவள் ஒளியாகவே விளங்க வேண்டும். ஆகவே, எங்கள் துன்ப துரிதங்களில் தேவதாயை அண்டிப் போவோம். ஏனெனில், சுவிசேஷம் சொல்லுவதுபோல் "கர்த்தர் உம்முடனே"என்ற அழகான வார்த்தை அவளுக்கே உரியது. தேவனைப்பெற்றவள் எங்களோடு இருந்தால்யார் எங்களுக்கு எதிராக இருப்பார்கள்?

### செபமும் போதகச்சடங்கும்

பிரவேசவாக்கியத்தை இசயாஸ் தீர்க்கதரிசியின் மூலமாக நாம் அறிகிருேம். தேவதாயானவள் ஓர் மணவாட்டியைப்போல் வரப்பிரசாதத்தின் அழகான ஆபரணங்களை அணிந்துகொண்டு இருக்கிருள் என்பதைக் காட்டுகின்றது. ஏனெனில், அவள் மாசில்லாமல் உற்பவித்து, கடவுளின் தாயாகவும், வரப்பிரசாதத்தின் ஊற்ருகவும் விளங்குகின்ருள். ஆகவே, இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த சகலரும் திவ்விய நற்கருணைநாதரை அண்டி எல்லாவித துன்பதுயரங்களையும் அவருக்கு வெளிப்படுத்துவோம். தேவதாயோடு நாங்களும் சேர்ந்து அக்களிப்புடன் "ஆண்டவரே, தேவரீர் என்னைக் கைதூக்கி, என்பகைவர்கள் என்னைப்பற்றிச் சந்தோஷமடையாதபடி செய்ததினுல் நான் உம்மை வாழ்த்துவேன்"என்னும் செபத்தைச் சொல்லுவோமாக.

**சபைச்செபம்:** தேவனிடம் நாம் தேவதாயார் மூலமாக எங்களுக்கு சுத்தமுள்ள இருதயத்தைத் தந்தருளும்படி மன்ருடுவோமாக, ஏனெனில், தேவதாய் பாவமாசில்லாமல் உண்டாக்கப்பட்டாள். ஆனுல், நாம் ஞானஸ்நானத்தினுலும், பச்சாத்தாபத்தினுலும் பாவமாசு இல்லாதவர்கள் ஆக்கப்படுகின்ருேம்.

**நிருபம்:** தேவனின் அதிகாரத்தையும், வல்லமையையும் காட்டுகின்றது. அத்தோடு தேவதாய் மெய்யானவள் என்பதைக் காட்டுகின்றது. ஏனெனில், மரியாய் தேவனின் நினைவிலும், சிலுவையின் அடியிலும் மனுக்குலத்துக்கு இரட்சணியம் அடைந்து கொடுப்பவளாய் விளங்குகின்ருள்.

**சுவிசேஷம்:** தேவதூதன் சொன்ன ஆழ்ந்தகருத்துள்ள "வரப்பிரசாதத்தினுல் நிறைந்தவளே வாழ்க," என்னும் வார்த்தையை நன்கு தியானிக்கும்படி நமது மாதாவாகிய கத்தோலிக்க திருச்சபை நம்மைத் தூண்டுகின்றது.

**நற்கருணைச்சடங்கு:** இன்றைய பூசை சமாதானத்தினதும், ஆனந்தத்தினதும் விதைகளை விதைப்பதற்கும் பசாசின்மேல் வெறுப்பையும், மூரண்பாட்டினதும் விதைகளை விதைப்பதற்கும் இடையேயுள்ள மாறுபாடுகளை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. தேவதாயும் அவவின் நேசகுமாரனும் பாம்பின் தலையை நசுக்கினர். யேசு நன்மைத்தனத்தின் விதைகளை பலனைக் கொண்டுவரும்பொருட்டுவிதைத்தார். இந்தப் பலனையே எமது எழிய, சிறிய கொடையாக நாம் இன்று காணிக்கைப்பகுதியில் அவருக்கு கையளிக்கிருேம். தேவதாயானவள் தனது உதரத்தின்கனியை உலகிற்கு அளிக்கக்கூடியவளாய் இருக்கின்ருள். ஏனெனில், அவள் முதல் தேவனுடைய எண்ணத்துக்குத் தன்னைத்தானே முற்ருக ஓர் கருவியாக ஒப்புக்கொடுத்தாள். சுருங்கச் சொல்லவேண்டுமாகில் அவள் யேசுவைத்தன் உதரத்தில் தரிக்குமுன் தன்மனதில் தரித்தாள். அவள் அவரை நேசித்தபடியாலும் அவரின் வரப்பிரசாதங்களின் நிறைகுறையாப் பாத்திரமாய் இருந்ததாலும் அவள் தேவனுக்குத் தனது சம்மதத்தைக் கொடுத்தாள். அமைதி மன்ருட்டில் தேவமாதா எப்படி முன்வரும் வரப்பிரசாதத்தினுல் பாவ அழுக்கில் நின்று காப்பாற்றப்பட்டாளோ, அதேபோன்று எங்கள் நற்கிரிகைகள்மூலம் உலகத்திற்கு கொண்டுவரத்தக்கதாக எமதுகுற்றங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமென்று மன்ருடுவோமாக.

காணிக்கை நேரத்திலே எங்களை முழுவதும் தேவனுக்கு அர்ப்பணித்து, தேவதாயின்மூலம் எங்களை நல்ல பிரசைகளாக்கும்படி மன்ருடுவோமாக. கடைசியாக எங்களைப் பரிசுத்தவான்கள் ஆக்கும்படியும் வேண்டிக்கொள்வோமாக.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

பரிசுத்த பாப்பானவர்
இம்மாதத்துக்கென நியமித்த
கருத்துக்கள்

---

### மாசிமாதம்

**பொதுக்கருத்து:** விசுவாசிகள் தம் வாழ்வின் கவலைகளினூடே செபத்தில் அதிக நேரம் கழிக்கத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** புதுத்தேசங்களை ஆண்டு நடத்துபவர்கள் நீதி நேர்மையின் ஆசையினுல் ஏவப்பட்டு, தம் ஜனங்கட்கு உண்மை நன்மையை அளிக்கமன்ருடிக்கொள்வது.

* * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

### மரண அறிக்கை விளம்பர விகிதம்

எமது பத்திரிகையில் மரண அறிக்கை விளம்பரம் பிரசுரிக்கவிரும்புவோர் பின்வரும் விகிதப்படி கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு முழு (Fool's cap)பக்கக் கையெழுத்துப் பிரதிக்கு ரூபா 6-00.

---

சீவியத்தின் எந்நிலையும் அதற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

றெஜினல்ட் ஆபிரகாம். ஓ. எம். ஐ.

## 1

### திருச்சபையில் பரபரப்பு

1958-ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9-ம் நாள் 12-ம் பத்திநாத பாப்பரசர் தமது ஆவியைக் கடவுளிடம் ஒப்படைத்தார். உலகமோ அளவில்லாத் துயரத்தில் அமிழ்ந்தியது. திருச்சபையை ஆண்ட பெருமகான் மாண்டுவிட்டார். இந்நாட்களில் திருச்சபையை ஆளுவதற்கு அவ்வரசரைப்போல் ஒருவரும் வரமாட்டார்கள் என வாதாடினர் மக்கள். கருதிஞல் றெங்கல்லி பாப்பு எனக்கேட்ட உலகம் தலையைச் சற்று அசைத்துக்கொடுத்தது. அருளப்பர் எனும் நாமத்துடன் அரசபீடத்தில் வீற்றிருந்தார் றெங்கல்லி.

பாப்பரச பீடமேறி ஒருவருடம் தான் இல்லை, உலகத்தையே மிகுந்த ஆச்சரியத்தில் அமிழ்த்திவிட்டார். வத்திக்கான் மாளிகையினின்று விடுத்த செய்தியானது மனோவேகத்தில் சென்று உலகத்தின் நாலு கோடிகளிலுமுள்ள மக்களை மகிழச்செய்தது. தந்தை கூறிய சொற்கள் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு முக்கிய விஷயமாக எடுத்துரைக்கப்பட்டன. அதாவது: "நாம் வெகுவிரைவில் ஒரு பொதுச்சங்கத்தைக் கூட்டுவிக்கவேண்டும்" என்பதொழிய வேறொன்றல்ல.

இன்று உலகம் முழுவதுமே இப்பெரிய சங்கத்திற்காக ஆயத்தப்படுத்துவதில் மிகுந்த சிரத்தை எடுத்துவருகிறது. இச் சின்னஞ்சிறிய நாடாகிய இலங்கைகூட, சர்வலோக சங்கத்தில் ஈடுபடத் தனதுபிரதிநிதிகளை அனுப்பி வைக்க ஆயத்தப்படுவதையும், அதற்காக மற்றும் நாடுகளுடன் சேர்ந்து ஒத்துழைப்பதையும் காணும் எம் மனிதன்தான் இவ்வளவு ஆயத்தங்கள் ஏன் எனக் கேட்காமலிருப்பான்?

1870-ம் ஆண்டு முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் 'பாப்புவின் வழுவாவரத்தைப்பற்றித் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டபின் வருங்காலத்தில் பொதுச்சங்கம் கூடுவதே அவசியமில்லை என அநேகவேதசாஸ்திரிகள் எண்ணங்கொண்டிருந்தனர். ஏனெனில், பாப்பரசர் தாமே தனிமையாக எவ்வித கருமங்களையும் தீர்மானிக்க முடியும்என எண்ணினர். ஆனல் நமது பரிசுத்தபிதா எவ்வித எண்ணங்களையுமிட்டுக் கவலைப்படாது திருச்சபையின் மேலான வளர்ச்சிக்காக ஓர் பொதுச்சங்கம் கூட்டுவது மகா அவசியமெனத் தகுந்த காரணங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆகவே, பரிசுத்த தந்தையின் விருப்பப்படி திருச்சபையின் இருபத்தொராவது சர்வலோக சங்கத்திற்கு ஆயத்தங்கள் வெகு மும்முரமாக உலகின் நாலு கோடிகளிலும் நடைபெற்று வருவது வெள்ளிடைமலை. இது திருச்சபையின் சரித்திரத்திலேயே வெகு முக்கியமான இடம்பெறும் என்று நாம் கூறத்தேவையில்லை. இப்பொதுச்சங்கமானது சித்திபெற வேண்டுமானல் திருச்சபையிலுள்ள கருதினல்மார், மேற்றிராணிமார், குருமார்களுடைய ஒத்துழைப்பு மாத்திரமல்ல, ஆனல், ஒவ்வொரு கத்தோலிக்கனது ஒத்துழைப்பும் உதவியும் அத்தியாவசியம். பிள்ளைகளும், இளம்வாலிபர்களும், முதியோரும் தங்கள் நல்நடத்தையாலும், அயரா உழைப்பினலும் தங்கள் செபதபங்களினலும் அஞ்ஞானிகளை மனந்திருப்பி உண்மையான திருச்சபையின் தேவதிரவிய அனுமானங்களால் அவர்களைச் சருவேசுரனுடைய பிள்ளைகளாக்க மிகுந்த கடமைப்பட்டிருக்கிருர்கள்.

இற்றைஞான்று நமது மேற்றிராணி ஆண்டவரவர்களும் குருமாரும் உட்பட உலகமே வெகுசிரத்தை கொண்டிருக்கும் வேளையில் நாம் கைகட்டி ஒருகரையில்இருப்பது சரியல்ல. சேசாருக்குடையதைச் சேசாருக்கும் சருவேசுரனுக்குடையதைச் சருவேசுரனுக்கும் கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, நமதுநாளாந்த சீவியத்திலே எவ்வித இக்கட்டு இடைஞ்சல்கள் இருப்பினும், நமது மாதாவாகிய திருச்சபை நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் உதவியை என்றும் அளிக்கத் தயாராகஇருக்க வேண்டும். நாம் வரப்போகும் பொதுச் சங்கத்திற்கு எம்மால் இயன்றளவு உதவிசெய்ய விரும்புவோமாகில் முதன்முதலாகப் பொதுச்சங்கம் ஆவது என்ன? பொதுச்சங்கத்திற்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்பு, அதன்காரணம் இவற்றை அறிந்திருத்தல் அத்தியாவசியம். ஆகவே நாம், வரவிருக்கும் சில வாரங்களுக்குப் பொதுச்சங்கத்தைப்பற்றி விசேஷமாக மேலே கூறப்பட்ட அத்தியாயங்களைத்தழுவி வரைந்திடுவோம்.

---

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினலும், உறுதியான வழிநடத்துதலினலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினல் பரமபிதாவினல் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்ருடுகிறேம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்ருடுகிறேம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்ருடுகிறேம்.

முன்னெருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னெருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்ருடுகிறேம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

---

## சிந்தனைக் கதிர் — 8

1875-ல் வந்தனைக்குரிய கருதினல் லவிஜறி ஆண்டகை ஆபிரிக்க மனந்திருப்புதல்பற்றித் திட்டமிட்டபோது அல்ஜீரியாவிலிருந்து மூன்று இளங்குருக்களை ரிம்புக்குநகருக்கு ஒட்டகைகள்மூலம் அனுப்பி வைத்தார். இடைவழியில் பயங்கரவாதிகளால் அவர்கள் கொல்லப்பட்டனர்.

ஐந்து ஆண்டுகள் அகன்றன. மீண்டும் மூன்றுநவகுருக்கள் அனுப்பப்பட்டனர். முந்தியவர்களின்கதியே இவர்கட்கும் நேர்ந்தது. ஆபிரிக்க மனந்திருப்புதலியக்கம் இவ்வித பயங்கர இன்னல்களின் மத்தியிலேயே ஆரம்பமாயிற்று

சத்தியதிருச்சபை எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு படையணி கிறிஸ்துவின்தூது மனித குலத்தின் இரட்சணியத்தை இலக்காகக் கொண்டுளது. அவர் மரிக்கும்போது தம்சீஷர்கள் இரட்சணியப்பணியைத் தொடர்ந்து நடாத்தவேண்டுமென ஆசித்தார். ஒவ்வொரு கத்தோலிக்கனதும் முக்கியகுறிக்கோளும் இதுவே.

எம் உறவினர்களும், அயலவர்களுமான மனிதகுலத்தினரின் இரட்சணியத்துக்காக எம்மாலியன்றவரை உழைக்க வேண்டியது எமது கடமை. இம்முயற்சியில் நேரடியாக உழைப்பவர்கட்கு உதவ முன்வருதல் அவசியம். எம்மத்தியிலும் சில அப்போஸ்தலர்கள் உதயமாகி கிறிஸ்துவின் தொண்டர்களுடன் கைகோர்த்து இரட்சணியப் பணியில் உழைக்கவும் உதவுவோம்.

அறுவடைக்காக அதிகதொழிலாளரை அனுப்பும்படி
மன்ருடுங்கள் (லூக். 10: 2.)

சா. பெ.

---

## பேசும் பேனு

அன்றொருநாள். யாழ்நகரின் பிரபல தேநீர்ச்சாலையொன்றில் பானம் அருந்திக்கொண்டிருந்தேன். மேலைநாட்டுப்பாணியில் உடையணிந்த இளைஞரொருவர் அங்குவந்தமர்ந்தார். உங்களுக்குப்பிடித்தமான கட்லெட், மட்டன்ரோல், பட்ரீஸ் எல்லாம் இருக்கின்றன. எது வேண்டும் என வினவினன் பணியாளன். இறைச்சிபோடாத பலகாரங்கள் இருந்தால் கொண்டுவா என்ருர் வாலிபர். ஏன் ஐயா இவ்விதம் சொல்கிறீர்கள்? இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நாங்கள் இறைச்சியைத் தவிர்க்கவேண்டும். மறந்துவிட்டேன் ஐயா, நீங்கள் கத்தோலிக்கரல்லவா எனக் கூறிக்கொண்டே வேறு சிற்றுண்டிகளைக்கொணர்ந்தான் பையன்.

பலர் முன்னிலையில் தாங்கள் கத்தோலிக்கர் எனச் சொல்லிக்கொள்வதில் கூச்சமடைகின்ருர்களே அவர்கட்கு இந்நிகழ்ச்சி ஒரு நல்ல பாடமாகும். இன்றைய நவநாகரிகங்களிலும் நவீன கொள்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நமது கத்தோலிக்க வாலிபர்களிடையே 'நான் கிறிஸ்தவன் இதுவே என் மகிமை' எனப் பிரகடனம் செய்யக்கூடிய நவரத்தினங்களும் உண்டு என்பதைப் பெருமையுடன் கூறலாமல்லவா?

* * *

கவிஞர் கண்ணதாசனை அறியாதவர்கள் அதிகமிருக்க முடியாது. கருத்தாழம் நிரம்பிய, எளியநடையிலமைந்த அவரின் பாடல்களே இன்றைய திரையுலகில் அதிகமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இப்பிறசமய அன்பர் அண்மையில் ஏசுநாதர் வருவார் என்ற தலைப்பில் வெளியிட்ட கவிதையொன்று என்கருத்தைக்கவர்ந்தது. நேயர்கட்கும் அக்கவிதையைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஏசுநாதர் வருவார்
கேட்பதெல்லாம் தருவார்
பாசமொழி புகல்வார்
பாவிகளுக் கருள்வார்.

காலிழந்து நின்ருல்
கைகொடுப்பார் அண்ணல்
கண்ணிழந்து நின்ருல்
தோள் கொடுப்பார் வள்ளல்
ஏழையென்று கண்டால்
ஏற்றுக்கொள்வார் தேவன்
இல்லையென்று கண்டால்
அள்ளி வைப்பார் மன்னன்

ஆட்டு மந்தை மீது
அன்பு வைத்த மேய்ப்பன்
அழிவில்லாத நோயும்
அகல வைக்கும் தேவன்
கர்த்தரவர் சபையில்
கருணைகீதம் கேட்கும்
கண்ணெதிரே சிலுவை
கைகள் நீட்டிக் காக்கும்..

---

### இன்றையஉலகிற்கு 130,000 குருப்பிரசாதிகள் தேவை

அண்மையில் ரோமாபுரியில் 1500 தேவ அழைத்தல் நிபுணர்கள் உலகத்தின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வந்து ஓர் மகாநாடு கூடினர். இம்மகாநாட்டில் தற்கால உலகில் கத்தோலிக்க குருக்களின் பற்ருக்குறை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. பிரதிநிதிகள் சமர்ப்பித்த அறிக்கைகளின்படி மெக்சிக்கோ தேசத்தில் 4663 கத்தோலிக்கருக்கு ஒரு குருப்பிரசாதியும், மத்திய அமெரிக்காவில் 6332 கத்தோலிக்கருக்கு ஒரு குருப்பிரசாதியும், தென் அமெரிக்காவில் 4461 கத்தோலிக்கருக்கு ஒரு குருப்பிரசாதியும் உள்ளனர் என்று கூறப்பட்டது. சுவிசேஷ போதக நாடுகளில் குருக்களின் பற்ருக்குறை இன்னும் அதிகமாகவே இருக்கும். மொத்தமாக தற்கால உலகிற்கு 13,000 குருப்பிரசாதிகள் தேவைப்படுகின்றனர் என்று கூறப்பட்டது. இக்குறையை நிவிர்த்திசெய்ய எட்டு அம்சங்களைக்கொண்ட ஒரு திட்டமும் மகாநாட்டில் தயாரிக்கப்பட்டுப் பாப்பரசருடைய தேவ அழைத்தல்களின் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் —

### வியாக்கியானக் குறிப்புகள்

### முகவுரை

(தொடர்ச்சி)

**அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் எப்போது எழுதப்பட்டது ?**

1. அலெக்ஸ்சாந்திரியாவின் அர்ச். சாந்தப்பரைத்தவிர, மற்ற எல்லா முற்காலத்து நூலாசிரியரும் மூன்று சுவிசேஷங்கள்—அர்ச். மத்தேயு, மாற்கு, லூக்காஸ்— என்ற முறைமைப்படி எழுதப்பட்டன வென்று ஏற்றுக்கொண்டனர். ஆனால், இரண்டாம் சுவிசேஷம் கி. பி. 63—68-ம் ஆண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதென்று பெரும்பான்மையாக ஏற்றுக்கொண்டனர். (சிலர் 42—45; வேறுசிலர் 52—63).

2. அர்ச். லூக்காஸின் அத்தாட்சியின்படி அவர் சுவிசேஷத்தை அப். நடபடிக்குமுன் எழுதினார். அப். நட. 1:—"ஓதெயோபிலே, யேசுநாதர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்கு இஸ்பிரீத்துவின் பேரால் கட்டளையிட்டு, பரலோகத்துக்கு ஆரோகணமான நாள்வரையில் அவர் செய்யவும் போதிக்கவும் தொடங்கின யாவற்றையுங் குறித்து நான் முந்தின பிரபந்தத்தை உண்டுபண்ணினது மெய்யே." ஆனால், அப். நடபடி 1, 63-ம் ஆண்டு எழுதப்பட்டிருக்கவேண்டும். உரோமாபுரியின் ஒரு பாகம் பெருநெருப்பின் நிமித்தம் அழிந்த பின்பு, (கி.பி.64) நீரோ என்ற சக்கரவர்த்தி கிறிஸ்து வேதத்தை கடுமையாகத் துன்பப்படுத்தினான். இதைப்பற்றி அர்ச். லூக்காஸ் அப். நடபடியில் குறிப்புக்கொடுக்கவில்லை. மேலும், அப். நடபடி அர்ச். சின்னப்பர் உரோமாபுரியில் முதல் முறை சிறைப்படுத்தப்பட்டதோடு முடிவாயிற்று(கி. பி. 63).

3. சுவிசேஷத்தில் அல்லது அப். நடபடியில் யெருசலேம் பட்டணம் நிர்மூலமாக்கப்பட்டதைப்பற்றி (கி. பி. 70—71) ஒரு குறிப்புமில்லை. ஆகையால் அதற்கு முந்தி எழுதப்பட்டிருக்கவேண்டும். எல்லா அத்தாட்சிகளையும் சோதித்துப்பார்த்தால், மூன்றும் சுவிசேஷம் கி. பி—63-ம் ஆண்டுக்குமுன் எழுதப்பட்டதென்று சொல்லலாம்.

**சுவிசேஷம் எங்கே எழுதப்பட்டது ?**

இந்த விஷயத்தைப்பற்றி தர்க்கமுண்டு. சிலர் அக்கேயாவில், சிலர் அலெக்ஸ்சாந்திரியாவில், அர்ச். லூக்காஸ் சுவிசேஷத்தை எழுதினாரென்று சொல்லுகிறார்கள். பொதுவாக, அவர் சுவிசேஷத்தை கிறீஸ் தேசத்தில் எழுதி, அலெக்ஸ்சாந்திரியாவில் அதை பிரசித்தப்படுத்தினாரென்று கருதப்படுகின்றது.

**அர்ச். லூக்காஸ் சுவிசேஷத்தின் நோக்கம் என்ன ?**

அந்தியோக்கியாப் பட்டினவாசியான அர்ச். லூக்காஸ் யேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுள், அன்றேல் சீஷர்களுள் ஒருவராக இருக்கவில்லை. அர்ச். சின்னப்பரால் மனந்திருப்பப்பட்டு வேதப்பரப்புதல் வேலையில் அவரது துணைவராக இருந்தார். சாஸ்திர, சிற்ப, வைத்தியத் துறைகளில் அவர் தேர்ச்சி பெற்றவர் என்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. தேவஅன்னை மட்டில் விசேடபக்தி பூண்டிருந்தாரெனவும் நம்ப இடமுண்டு. இவரது சுவிசேஷத்தை அர்ச். ஏரோணிமுஸ் அர்ச். சின்னப்பரது சுவிசேஷம் என அழைக்கிறார்.

"ஓ! உத்தம தியோபிலேயே" எனத் தொடங்கும் இவரது சுவிசேஷத்தைக் கவனிக்கும்போது அதைத் தியோபிலஸ் என்ற ஒரு தனிப்பட்ட ஆளுக்கு எழுதினதாகக் கருதலாம். தியோபிலஸ் என்றபதம் கிரேக்க பாஷையில் தேவபக்தன் எனப் பொருள்படும். எனவே, இது தேவபக்தனான ஒருவருக்கோ, அன்றேல் தேவபக்தரான கிறிஸ்தவமக்களுக்கோ எழுதப்பட்டதாகவும் கொள்ளலாம். இதைவிட்டு, அவரது பிரதான நோக்கத்தை ஆராயப்புகுவோம்:

1. மனந்திரும்பிய புறஜாதியாருக்காக எழுதினார். இதை நாம் பல சுவிசேஷ சம்பவங்கள், மேற்கோள்களைக் கொண்டே எண்பிக்கலாம். இரட்சணியம் யூதமக்களுக்கு மாத்திரமன்றிச் சகல சாதியாருக்கும் பொதுவானது, என்கிறார். அர்ச். மத்தேயு மெசியா யூதரை இரட்சிக்க வந்தாரெனக் காட்டினார். ஆனால், அர்ச். லூக்காவோ இரட்சகர் சகல சாதி சனங்களுக்கும் பொதுவானவர் எனக்காட்டி நிற்கிறார். அர்ச். மத்தேயு கிறிஸ்துவின் ஜனனவழியைக் குறிக்கும்போது அவர் ஆபிரகாமின் சந்ததியார், அதாவது அவர் யூதன் என்று கூறி நிற்க, அர்ச். லூக்காஸ் அவர் ஆதாமின் சந்ததியார் என்று விளக்கி நிற்பதை அவதானிக்கிறோம் (மத். 1-ம்அதி. 1-ம்வச.). (லூக்கா 3-ம்அதி. 23—28). அஞ்ஞானிகளுக்கும், புறசாதியாருக்கும் துக்கம் வருவிக்கக்கூடிய வார்த்தைகளை விட்டுவிடுகிறார், மாற்றுகிறார், அன்றேல் பொதுவாகக் கூறிக்கொண்டு போகிறார்: "நீங்கள் புறசாதியாரின் நாடுகளிலும், சமாரியருடைய பட்டினங்களிலும் போகாமல் ... ... முக்கியமாய் போங்கள் என்று அர்ச். மத்தேயு குறிப்பிடுவதை (10: 5) அர்ச். லூக்காஸ் 9-ம் அதிகாரத்தில் விட்டுவிடுகிறார். எந்த வீட்டில் பிரவேசித்தாலும் அதை விட்டுப்போகாது அங்கே தங்கியிருங்கள், அஞ்ஞானிகள் என அர்ச் மத்தேயு 5-ம்அதி. 47-ம்வசனத்தில் குறிப்பிட அர்ச். லூக்காஸ் பாவிகள் என்று கூறுகிறார். இன்னமும் "எல்லாச் சாதியாராலும் நீங்கள் பகைக்கப்படுவீர்கள்" என மத்தேயு குறிப்பிடுவதை லூக்காஸ் "எல்லாச் சனங்களாலும்" என்று கூறுவதையும் அவதானிக்கலாம்.

யூதருடைய வேதம், நாட்டுப் பழக்க வழக்கங்கள், இடங்கள், ஊர்களைப் பற்றிப் புறசாதியார் மிகச் சொற்ப அறிவையே உடையவர். எனவே, இவைகளைப்பற்றி விரிவான விளக்கங் கொடுத்துக் கொண்டு போவதில் நின்றும் புறசாதியாருக்காக இவர் தமது சுவிசேஷத்தை எழுதினார் என்று கூறலாம். உ—[illegible] கூம் என்பன [illegible] ளன(1-ம் அதி. 26-ம் வச. 4-ம் அதி. 31-ம் வச). ஜெரசேலியா கலிலேயாவுக்கு எதிராக உள்ளது (8-ம் அதி. 26-ம் வச) அரிமத்தியா யூதேயாவில் உள்ள ஒருபட்டினம் (23-ம் அதி. 51-ம் வச). எம்மாவூஸ் ஜெருசலேமிலிருந்து 60 காதவழி (2-ம் அதி. 13-ம் வச) என இடங்களைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிடுகிறார். தேவாலயத்தில் தூபம் காட்டுஞ் சடங்கு, சுத்திகரச்சடங்கு இவை பற்றிய விபரமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. இன்னும் கிறிஸ்துநாதரின் இரக்கத்தை விளக்கும் புதுமைகள், உவமைகளை எடுத்தாளுகின்றார். நாமான், சறேப்ரா நாட்டு விதவை என்னும் புறசாதியாருக்கு சர்வேசுரன் காட்டிய இரக்கத்தைக்கூறி, சமாரித்தர் மட்டில் அனுதாபம் காட்டுகிறார். தாழ்மையான ஆயக்காரன், மத்தேயு, சக்கேயுஸ், நல்ல கள்ளன் மட்டில் காட்டிய தயையையும் விபரமாகக் குறிப்பிடுவதையும் நாம் காண்கின்றோம். நல்மனமுள்ளவர்களுக்குச் சம்மனசானவர் சமாதானத்தை அறிவித்ததாகவும் காட்டுவதின் நோக்கம் இதுவேயாகும்.

2. அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை மனந்திரும்பிய யூதருக்காகவும் எழுதினார். அர்ச். சின்னப்பரால் மனந்திருப்பப்பட்ட கிறிஸ்தவர்கள் என்ற அளவில் யூதர்களும் அவர்களுள் சேர்ந்திருந்தனர். இவரது சுவிசேஷத்தின் முதலிரு அதிகாரங்களையும் நாம் ஆராய்வோமானால் அவற்றில் அதிக பழையஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டுகொள்ளலாம். சக்கரியாசுக்குச் சம்மனசானவர் யூதரை மனந்திருப்பும் ஒரு புத்திரனை வாக்குப்பண்ணுகிறார். அதே தூதன் பரிசுத்த கன்னிகைக்குத் தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றும் அரசாளப்போகும் ஒருமைந்தனை அவள் பெறப்போவதாக உரைக்கின்றார். மரியம்மாள்பாடிய தனது கீதத்தில் தமது கிருபையை......பரிக்கிரகம் பண்ணினர் என்றும் பாடினாள். இவைகளை உற்றுநோக்கின், இவை பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள்என்று கண்டுகொள்வோம். இவற்றை இங்கு எடுத்தாள்வதின் நோக்கம் பிரத்தியேகமானது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நன்கு அறிந்திருந்தோர் யூதமக்கள் அன்றிப் புறசாதியார் அல்லர், எனவே, மெசியாவைப் பற்றிய இத்தீர்க்க தரிசனங்கள் யேசுநாதரில் நிறைவேறியதைக் கண்டு, அவரைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே இவர் அடிக்கடி யேசுக்கிறிஸ்துநாதரை யூதரின் இரட்சகராகக் காட்டுவதையும் அவதானிக்கிறோம், சிமியோன் அவரில் இஸ்ராயேலரின் மகிமையைக் காண்கிறார் (2-ம்அதி. 32-ம்வச). அன்னாள் இஸ்ராயேலரின் இரட்சிப்புக்குக் காத்திருந்த சகலருக்கும் அவரைப் பற்றிப்பேசினள். இவைகளைக் கொண்டு நாம் அடையக்கூடிய முடிவு யாதெனில், இஸ்ராயேல் மக்களும் இரட்சகரது வருகையால் பலன்அடைய வேண்டியவர்கள். இரட்சகர் அவர்கட்காகவும் வந்தார். ஆகவே, அர்ச். லூக்காஸ் இச்சுவிசேஷத்தை யூதசாதியாருக்காகவும் எழுதினாரென்று நிச்சயமாகக் கூறலாம்.

3. விசுவாசிகள் அல்லாதாரும் இதை வாசித்து நன்மை அடைய வேண்டும் என்பது அவரது தயான சிந்தையின் ஒருபகுதியாகும். இரட்சணியம் சகல சாதிகட்கும் பொது என்னும் அபிப்பிராயம் இதை வாசிப்பதால் ஏற்படும். இரட்சகரின் இரக்கம், அனுதாபம், அன்பினால் அவர்பால் இழுக்கப்படுவர். "யான்பெற்ற செல்வம் பெறுக இவ் வையகமும்" என்ற பரந்த மனப்பான்மை உடையவராய்த் தம்மைப் போன்று ஏனையோரும் கிறிஸ்துவில் விசுவாசங் கொண்டு, இரட்சணியம் அடைய வேண்டுமென்பது அர்ச். லூக்காவுடைய ஆவலாகும்.

---

# புதுமை வரவணிக்கம்

[20-4-60 இல் 'தர்மசேயர்' சபைக் கன்னிகாஸ்திரி ஒருவரால் தரப்பெற்ற வரலாறு]

எங்கள் மடத்தின் இரண்டாவது மாடியில் பழுதடைந்திருந்த மின்சாரத்தூக்கியை அதாவது 'லிவ்ற்' றைபழுதுதிருத்திக்கொண்டிருக்கும்போது, இருபத்தைந்துவயது நிரம்பிய எங்கள் பணிப்பெண் ஒருத்தி விவேகக்குறைவாய் தனது தலையைத் தூக்கியின்உள்ளே நீட்டவே தூக்கியும் அதேவேளையில் அடித்தளம்நோக்கி இறக்கப்பெற்றது. எனவே பெண்ணின் உடல் மாடியின் பளிங்குத்தளத்தில் இருக்க அவளின் கழுத்தோ தூக்கியின் கூடாரத்துக்கும், தளத்தின் விளிம்புக்கும் இடையில் பிடிபட்டு நசிந்துகொண்டது.

தூக்கியைச் சற்றே உயர்த்தி, வாருய்க் காயம் ஏற்பட்டுப் பிரஞ்ஞையற்ற அந்த ஏதையை வைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பதற்கு வேண்டிய வசதிகள்யாவும் ஒருசில விநாடிகளுள்ளேயே கிடைத்தனவாயினும் அச்சில விநாடிகளும் பெரு வியாகுல விநாடிகளாகவே கழியலாயின.

காலை 8மணியில் நிகழ்ந்தது இச்சம்பவம். அன்றுமாலையில் அவளுக்கு நல்லறிவு வந்துவிட்டது. அவளின் கபாலம், கழுத்து, தோள் முதலிய அங்கங்கள் உடனே படம் பிடித்துப் பார்வையிடப்பட்டன. ஒருவித குறைபாடும் தோன்றவில்லை. எலும்பு முறிவு தறிவோ சிறு வெடிப்பு முதலாய் இல்லை, இல்லவே இல்லை.

நேற்று அவள் கோயிலுக்கு வந்து சாதாரணமாய் முழங்காலில்இருந்து பூசையில் பங்குபெற்றுள். இன் [illegible]போவாள் என [illegible]

மாதாதான் என்னைக் காப்பாற்றினார் என்று வைத்திய விடுதியில் ஒவ்வொருவருக்கும் அடிக்கடி எடுத்துக் கூறுகிறுள். நான் அவளின் சட்டையில் குத்திவிட்ட புதுமை வரவணிக்கத்தைச் சுயஅறிவு வந்தவுடன் அவள் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புடன் என்னைநோக்கி, தான் கழுத்தில் அணிந்திருந்த வரவணிக்கத்தைக் காட்டி, "தாயாரே, ஒரு கணமேனும் நான் இதைப்பிரிந்திருந்ததில்லை. தூக்கியிலும் என் கழுத்திலேதான் இது தொங்கிற்று. என்னைக் காப்பாற்றியதும் இதே வரவணிக்கந்தான்" என்றனள்.

வைத்தியசாலையில் 'லிவ்ற்' சாரதி அவளைப் பார்க்கப்போயிருந்தவேளை அவன், "சாதாரணமாய் உன் கழுத்துத் துண்டாகியிருக்கவேண்டியது, அறியாயா இதை நீ?" என்று வினவினுன்.

அதற்கு அவள், "இல்லை! கழுத்து அகப்பட்டதும் தேவதாயாரை நான் வேண்டிக்கொண்டேன், என்னைக் கைவிடத் தாயாருக்கு முடியவில்லைப் போலும், பின்பு என்ன நிகழ்ந்ததோ நானறியேன்" என்று வெகு அடக்கவொடுக்கமாய்க் கூறினுள்.

ஒருசிறு முறிவுதானுமின்றி இவள் எப்படித் தப்பியிருப்பாள் என்பது எங்கள் மனசுக்குப் பெரும் புதிராக இருக்கிறது என்று வைத்தியர் யாவரும் ஒருப்படக் கூறுகின்றனர்,

அதிபரிசுத்த கன்னிமரியாய்க்கு நன்றிசெலுத்தத் தயவுபுரியுங்கள். (புதுமைவரவணிக்க வியாபிப்பு ஸ்தலம், பாத்திமாகோயில், மருதானை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WANTED**

Sales Girl with English Knowledge, age about 25 for Optical Shop.

V. T. FERNANDO,
18, Clock Tower Road,
JAFFNA.

## புளியடிக்குடாப்பங்குச் செய்திகள்

### கத்தோலிக்க தச்சுத்தொழிலாளர் சங்கம்

கருண்டு சுருண்ட காரிருள்பரந்து விரிந்து பாய்ந்தோடத் தெளிந்து குளிர்ந்த ஞானஒளி உட்புகுந்து தச்சரின் உள்ளங்களையே ஒளிரச்செய்தது அதிசயம்! அதிசயம்!!

சென்ற 28-1-62 ஞாயிறு 2-ம் பூசையின்பின்னல் அர்ச். செபஸ்தியார்பாடசாலைக்கு மரியாயின் சேனைத் தலைவரது இடையறு உழைப்பாலும், அங்கத்தினரின் தீவிர முயற்சியாலும் பங்கில்வாழும் தச்சுத்தொழிலாளிகள் அனைவரும் வியப்பிடத்தக்கமுறையில் ஒன்றுதிரண்டனர். காலைப்போசனம் தயாராய்இருந்ததால் களிப்புடன் அருந்தி "நிகழ்ச்சிநிரல்" இடப்பட்ட சாலைசென்று ஆசனங்களில் அன்புடன் அமைதியாய் இருந்தனர்.

"இதுகாலும் சரீரநன்மைக்காய் உழைத்தநீங்கள் இன்றுதொட்டு ஆத்தும சரீர நன்மைக்காய் உழைக்க வேண்டும்" என்று கேட்கவே இங்கு அழைக்கப்பட்டீர்கள் என்னும் வார்த்தை மரியாயின் சேனைத்தலைவர் வாயின் நின்றும் பிறந்தது. "இதுகாலும் மீன்களைப் பிடித்தீர்கள் இன்றுடன் மனிதரைப் பிடிப்பீர்கள்" என்ற யேசு வார்த்தை தானே? எனப் பலதச்சர் ஆச்சரியமும், வியப்பும், பயமும் திகிலும் கொண்டார்கள். வண. கட்டளைக் குருவானவர் A. செலர் சுவாமியவர்களால் "ஒற்றுமையே உயிர்நாடி", "ஒருமனப்படல்", "வேற்றுமைப்பிரிவுகள்", "கூட்ட உறுதிப்பாடு" ஆகிய அங்கங்கள் விளக்கமாய் உரைக்கப்படவே எல்லோர் முகமும் மலர கூட்டம் ஒன்று அமைக்கவேண்டுமென்ற ஆர்வம் எழத்தொடங்கியது.

தச்சர் திரு. சந்தியாப்பிள்ளையவர்கள் "இன்று ஒரு பாக்கியமான நன்னாள்," என்னல் 15 வருடங்களாக முடிக்கமுடியாததை நான் நினையாத நேரத்தில் நீங்கள் முடித்துவிட்டீர்கள். இப்படி எல்லாத்தச்சரும் ஒன்றுசேர்வார்களென்பதைக் கனவிற்கூட நினைக்கவில்லை. எல்லாம் மரியாயின் பக்திதான் என்றும், ஆகவே இன்றுடன் கூட்டம் ஆரம்பமாகி நடைமுறைக்குக் கொண்டுவரப்படல் வேண்டுமென்றும் பல, பல நியாயங்கள்காட்டி விளக்கினர். தச்சர், வெஞ்சமின், இருதயம் என்போர்களும் சிலபுத்திமதிகள் கூறவே எல்லோரும் "தொழிலாளர் அர்ச். சூசையப்பர் தொழிற்சங்கம்" என்னும் நாமத்துடன் சங்கம் அமைக்கத் தமது வலதுகரங்களை உயர்த்திக்காட்டினர். பின்னல்,

தலைவர்: ஒலிவர் என்திறக், உபதலைவர்: M. இருதயம், காரியதரிசி: வெஞ்சமின், உபகாரியதரிசி: பத்திநாதன், தனாதிகாரி: ஜொனத்தன், நிர்வாகசபை அங்கத்தவர்கள்: லூக்கஸ் ரூகல், அப்போன்ஸ் அந்திருது, லூவி அவுஸ்க்கோன், வெஞ்சோ அவுஸ்க்கோன், லோசன் ரூகல், ஸ்ரானி வெற்றப் புறும், சந்தியாப்பிள்ளை, யோசோ அந்திருது, மொறிஸ் அவுஸ்க்கோன் என்போர் தெரிவுசெய்யப்பட்டு 18-2-62 பிற்பகல் 7 மணிக்கு நிர்வாகசபையும், 25-2-62 ஞாயிறு 2-ம் பூசையின்பின்பு மாதாந்தக் கூட்டமும் கூட்டப்படும் என்றும் தீர்மானமாகி, வண. ஞானத்தந்தையவர்களின் ஆசிருடன் முடிவுற்றது.

பரமபதமடைந்த

**திருமதி சந்தியா கிறிஸ்தீனு**

அவர்களின்

## மரணஞாபகம்

**பிறப்பு: 6-1-83 இறப்பு: 22-1-62**

முடிவில்லாத பிரகாசம் இவளுக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

மக்கள்:
டக்றர் ச. செ. தம்பிமுத்து, (மலாயா)
ச. ஞானமுத்து
கி. செல்லம்மா
மருமகன்: சி. கிறிஸ்தோப்பர்
இன்னும் பேரப்பிள்ளைகள்

போயிட்டி, இளவாலை.

குறிப்பு: இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் மற்றும் சகோதர சகோதரிகளை இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காகவேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

**புத்தக மதிப்புரை**

## ஞானவாழ்க்கை

ஆக்கியோன்:
சி. சா. மரியாரோக்கியநாதர்
பிரசுரம்:
தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி
விலை: ரூபா 2-00

ஞானவாழ்க்கையின் இலக்கணத்தை விளக்கும்நூல் தமிழ்மொழியில் இல்லாதிருக்கும் பெருங்குறையை நீக்குமுகமாக வண. சி. சா. மரியாரோக்கியநாத சுவாமியவர்கள் தமது அனுபவத்தைத் துணைக்கொண்டும் பலநூல்களை ஆராய்ந்து அவற்றால் பெற்ற அறிவைத் துணைக்கொண்டும் "ஞானவாழ்க்கை" என்ற பெயருடன் இவ்வரிய நூலை எழுதியுள்ளார்கள். கிறிஸ்துவத்தையும், தமிழையும் வளர்ப்பதையே தனது தலையாய பணியாகக்கொண்ட தூத்துக்குடித் தமிழ்இலக்கியக்கழகம் இந்நூலைப் பிரசுரித்துள்ளது.

"ஞானநூல்" பொதுவியல், சிறப்பியல் என இரு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற்காண்டம் ஞானவாழ்க்கையின் வரலாறு, ஞானவாழ்க்கையின் இயல்பு, ஞானவாழ்க்கையின் முதிர்ச்சிநிலை, சால்பு எய்தும் கடமை, சால்புச்சாதனம் என்ற ஐந்து அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் காண்டம் துலக்க நெறி, விளக்க நெறி, ஒற்றுமை நெறி என மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டு அவையொவ்வொன்றும் பல அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

ஞான வாழ்க்கையின் இலக்கணங்கள், இலக்கண முறையாகவும் வேதநூலுக்குப் பொருந்துமாறு தெள்ளத் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. சூக்குமமான அரிய கருத்துக்களைச் சிறந்த உதாரணங்களுடன் இனிய செந்தமிழ்நடையில் விளக்கியிருக்கும் வகை ஆக்கியோனது தமிழ்ப்புலமையை இனிது புலப்படுத்தும். குறியீட்டுச் சொற்கள் பல பிரயோகிக்கப் பட்டுள்ளபோதிலும் அவற்றால் வாசகர்களுக்கு மலைப்பு வாராவகையில் அடிக்குறிப்புக்கள் இடப்பட்டுள்ளன.

இந்நூல் அருள்வாழ்வின் தன்மைகளையும், அதைப் பெறும் வழிமுறைகளையும், அதை விருத்திக்கும் நெறியையும் அழகாக விளக்கிக் காட்டுகின்றது. ஆகவே, இது பக்திவாழ்க்கையை விரும்பும் கிறிஸ்தவர்களுக்கும், சிறப்பாகக் குருமட மாணவர்க்கும், சந்நியாசிகளுக்கும் பெரும் பயனளிக்க வல்லது. [illegible] நன்றிகூறுகின்றோம்.

## முதல்வருட நல்மரண ஞாபகம்

**தோற்றம்:**
**12—2—1889**



**மறைவு:**
**4—2—1961**

**வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல் அவர்கள்**

பரமபதமடைந்த முதல்வருட நிறைவுதினம்

**5 — 2 — 1962.**

அன்று காலை 7 மணிக்கு
சில்லாலை ¦சேமக்காலையிலுள்ள சிற்றாலயத்தில்
அவரது ஆன்ம சாந்திக்காகத்
திவ்விய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.
இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு
தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.
முடிவில்லாப் பேரொளி இவர்மீது ஒளிர்வதாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3357**

காரைநகர் வடக்கு, காரைநகர்
(1) இராசையா செல்லத்துரை
(2) பெண் வாலாம்பிகை
— வழக்காளி

எதிராக

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை
(1) மார்க்கண்டு சப்பையா
(2) பெண் தங்கம்மா
(3) நடராஜா நவரத்தினம்
(4) பெண் கமலாதேவி
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3357-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1962-ம் வருடம் மாசிமாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3540/-உம், 27-9-60 தொடக்கம் 12-6-61 வரைக்கும் ரூபா 2,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 272 ரூபா 35 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, வண்ணார்பண்ணைவடமேற்கு "இத்திக்கூடலும், இத்திக்கூடல் பள்ளன் காடு"ம். நிலப்பரப்பு 10-ம், பனைகளும், மற்றுமதற்குரியவைகளும். எல்லை: கிழக்கு — அப்பாத்துரை திருநாவுக்கரசு பெண் புஷ்பதேவிக்குரிய ஆதனம். வடக்கு — சின்னப்பொடி தம்பித்துரைக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் — ஒழுங்கை. பதிவு யாழ்ப்பாணம் 229/81.

**ஆ. ச. இராசேந்திரம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம்.

> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

### நன்றித்துதி

பரலோக இராக்கினியான சதாசகாய மாதாவின் இரக்கத்தினலும், கோடிஅற்புதராம் அர்ச். அந்தோனியாரினதும், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராம் அர்ச். யூதாததேயுவினதும் மன்றாட்டினலும் எனதுமகனுக்கு உத்தியோகமும், இளையமகனுக்குச் சோதனையில் சித்தியும் கிடைத்தது. பிரசுரிக்கத் தாமதித்தற்கு மன்னிப்புக்கோரி இன்னும் எங்கள் குடும்பத்தில் இருக்கும் கஷ்டங்களை நீக்கும்படி தாழ்மையுடன் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்னம்மா

மாதகல்

## சென் வின்சென்ற் டீ போல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபைப் பங்கிகளின் 1960-ம் ஆண்டின் 4-ம் காலவருடக்கூட்டம் சஞ்சூசையப்பர் பங்கிச்சாலையில் சென்ற 28-ம் தேதி ஞாயிறுவாரம் பிற்பகல் 5-30 மணிக்குச் செபத்தோடு ஆரம்பமாகி மேற்படி சபையின் ஞான வழிகாட்டியாகிய அதிவண. புரோகான் சுவாமியார் சமுகத்தில் தனிச்சங்க அக்கிராசனராகிய திரு. S. M. J. லூயிஸ் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறியது.

தனிச்சங்க உத்தியோகஸ்தர்களும், மூன்றுபங்கிகளின் அங்கத்தவர்களாகிய 26 சகோதரர்களும் சமுகமாயிருந்தனர். முறையே சஞ்சூசையப்பர் பங்கி, சென் ஜேம்ஸ் பங்கி, பரலோகமாதா பங்கிகள் தமது மூன்றுமாத அறிக்கையைச் சமர்ப்பித்தனர். திரு. P. சவிரிமுத்து அவர்கள் "தாழ்ச்சியும் தருமமும்" என்னும் விஷயமாய் அரியதோர் உபந்நியாசம் நிகழ்த்தினர். அதன்பின்னர் அங்கத்தவர் சிலர் வாழ்த்துரையும், குறிப்புரையும் கூறினர். ஈற்றில் தனிச்சங்க காரியதரிசியும், அக்கிராசனரும் தமது குறிப்புரைகளைக் கூறியபின் கூட்டம் செபத்துடன் இனிது முடிவெய்தியது.

இங்ஙனம்,
A. S. FRANCIS of MARY,
தனிச்சங்க காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

—நமது நிருபர் அமலன்

## ● தபால்மூலம் கத்தோலிக்க கல்வி ● வெள்ளிவிழாகண்ட சஞ்சிகை ● இலவச கத்தோலிக்க பிரசுரச்சேவை ● கிறிஸ்தவ ஒற்றுமைக்கு இருதடைகள்

பெரியண்ணு: இலங்கையில் தபால் மூலம் சிலநிலையங்கள் கல்வியளித்து வருவதுபோல நியூசிலாந்தில் தபால் மூலம் கத்தோலிக்ககல்வியைப் போதிக்கின்ருர்களாம்.

அன்ரன்: அந்தநாட்டில் கத்தோலிக்க பாடசாலைகள் கிடையாதோ?

பெரியண்ணு: மாட்டுப்பண்ணைகளும், கோதுமைவயல்களும் செறிந்து பரந்துகிடக்கும் நியூசிலாந்தில் கிராமங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று வெகு தொலைவில் அமைந்துள்ளன. கிராமங்களில் குறைந்தளவு கத்தோலிக்ககுழந்தைகள் காணப்படுவதால் பலகிராமங்களில் கத்தோலிக்க பாடசாலைகளை நிர்வகிக்க முடியாது. அரசாங்க பாடசாலைகளில் பயிற்சிபெற்றுவரும் இக்குழந்தைகளின் ஆன்மீகதேவையைப் பூர்த்திசெய்ய இந்நாட்டின் ஒக்லண்ட்நகரில் உள்ள கனுக்கிள் கன்னியர்மடத்தினர் தபால்மூலபோதனையை வெற்றிகரமாக நிர்வகித்து வருகின்றனர்.

கார்மெலா: சாதாரண போதனையா அல்லது வகுப்புகட்கேற்றவிதமாகத் தரத்தில் வேறுபாடுள்ள கல்வியா?

பெரியண்ணு: வயதுக்கேற்றவிதமாக ஆறும்வகுப்புவரை மாணவர்களை மூன்றுபிரிவாக வகுத்துள்ளனர். ஒக்லண்ட்நகரிலுள்ள கத்தோலிக்க பட்டதாரிகள், பேராசிரியர்கள்பலர் இக்கன்னியர்மடத்தில் வாரஇறுதியில் ஒன்றுகூடிப் பாடங்களைத் தயார்செய்வதிலும், மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்துவதிலும் தங்கள்சேவையை இலவசமாக அளித்துவருகின்றனர். பாலர்விரும்பும் சிறுகதைகள், பைபிள்கதைகளை விளக்கும் வண்ண ஓவியங்கள், பல்வேறுபோட்டிகள் முதலிய அம்சங்கள்பல இப்பாடங்களில் அடங்கியுள்ளன. உயர்வகுப்புகட்காக வேதபோதகத்திலும், சுவிசேஷத்திலும் விசேடபாடங்களும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

நிர்மலா: கத்தோலிக்க குழந்தைகள் இப்போதனையைவிரும்பி வரவேற்கின்ருர்களா?

பெரியண்ணு: இக்கன்னியர்மடத்திலிருந்து வாரமொருமுறை ஆறுபெரிய தபாற்சாக்குகள் அஞ்சல்நிலையத்துக்கு அனுப்பப்படுகின்றன. நியூசிலாந்து முழுவதிலுமுள்ள கிராமப்புறங்களிலிருந்து சுமார் ஆறுயிரத்துக்குமதிகமான குழந்தைகள் இந்நிலையத்தின் சேவையைப் பெறுகின்றனராம். விடைகளுடன்வரும் குழந்தைகளின் கடிதங்கள்வாசிக்க வெகுமகிழ்ச்சிகரமானவை. தங்கள் இல்லங்களில் நடைபெறும்நிகழ்ச்சிகள் அனைத்தையும் பல குழந்தைகள் எங்களுக்கு எழுதுகின்றனர்என அண்மையில் இக்கன்னிகாநிலையத்தலைவி கூறினர். தங்கள் சேவை பலகத்தோலிக்க குழந்தைகளின் ஆன்மீகவளர்ச்சிக்கு உதவுகிறது என்பதையறிய மிகமகிழ்ச்சியடைவதாக அத்தலைவி குறிப்பிட்டுள்ளார்.

அப்பா: நேரடியாகப் போதிப்பதிலும்பார்க்க இவ்விதம் சுவாரஸ்யமாக ஓவியங்கள், கதைகள்முதலியவற்றுடன் வேதக்கொள்கைகளையும் புகுத்துவதில்தான் சிறந்தபலன் கிடைக்கக்கூடியது.

அகஸ்ரின்: நீங்கள் சொல்வதுபோல இருபத்தைந்து வருடங்கட்குமுன்னர் அமெரிக்காவில் இதே இலட்சியங்களுடனமைந்த ஒருகத்தோலிக்க பத்திரிகையைச் சிலகல்விமான்கள் தொடக்கினர். இன்று அச்சஞ்சிகை பலுகிப்பெருகிப் பலம்வாய்ந்ததோர் முன்னணியேடாகத் திகழ்கின்றது.

அஞ்சலா: எந்தப் பத்திரிகையைக் குறிப்பிடுகின்றீர்கள்?

அகஸ்ரின்: அமெரிக்காவில் சென்போல்நகரிலிருந்து வெளியாகும் கதலிக் டைஜஸ்ட் சஞ்சிகையைத்தான் குறிப்பிடுகிறேன். அண்மையில் இச்சஞ்சிகை தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. உலகமடங்கிலும் பரவியுள்ள இதன் பலஇலட்சக்கணக்கான வாசகர்களுள் அரைப்பங்குபேர் கத்தோலிக்கரல்லாதவர்கள். இதற்குக் காரணம் இக்கத்தோலிக்க பத்திரிகையின் கட்டுரைகட்குள் காற்பங்கிலும் குறைவாகவே கத்தோலிக்க விஷயங்களைக் காணலாம். ஏனையவிஷயதானங்களனைத்தும் பொதுவாக எல்லா வாசகர்களாலும் விரும்பக்கூடிய நல்லறிவைப் புகட்டக்கூடியவையே. எனவே, பெருமளவில் கத்தோலிக்கரல்லாதாரையும் கவர்ந்துவருகிறது இச்சஞ்சிகை. காலத்துக்குக் காலம் சிறந்தகத்தோலிக்க நூல்களையும் இச்சஞ்சிகையின் புத்தகப்பகுதி மிகநல்லமுறையில் பிரசுரித்துவருகின்றது. இப்புத்தகப்பகுதிக்கு 56,000 அங்கத்தவர்கள் உண்டாம்.

அப்பா: இவ்வித நல்ல சஞ்சிகைகள் ஏராளமாக வெளிவரவேண்டும். அவற்றைக் கத்தோலிக்கர்களிடையில் சிறப்பாக நம் இளைஞர்களிடையே பரப்புதல்வேண்டும். இதனுல் நல்ல பயனுண்டு.

பெரியண்ணு: கத்தோலிக்க அச்சுப்பிரசுரங்களைப் பரப்புதல் நல்லதோர் தொண்டு. இலங்கையிலும் சிலர் இலவசமாகப் பலநல்ல கத்தோலிக்க சஞ்சிகைகளைப் பரப்பிவருகின்றனர். அண்மையில் ஒருவரின் சேவையைப்பற்றி இங்கிலாந்திலிருந்து வெளியாகும் யுனிவர்ஸ்என்ற கத்தோலிக்க வாரசஞ்சிகையில் செய்தியொன்று வெளியாகியது.

> **உல்லாச வேளையில்**
> **நீங்கள் சந்திக்கும் முக்கிய பிரமுகர்கள்**
>
> **அப்பா:** இளைப்பாறிய ரெயில்வே நிலைய அதிபர்.
> **பெரியண்ணு:** கச்சேரியில் ஒரு பிரதான அதிகாரி.
> **சின்னண்ணு:** ஆசிரியகலாசாலை மாணவன்.
> **அமலன்:** நமது நிருபர்.
> **அன்ரன்:** கடைசிப்பையன். சிரேஷ்ட வகுப்பில் பயிலுகிறுன்.
> **அகஸ்ரின்:** மூத்த மாப்பிள்ளை. பட்டதாரி ஆசிரியர்.
> **நிர்மலா:** அவரது மனைவி. பயிற்றப்பட்ட ஆசிரியை.
> **இயூஜின்:** புது மாப்பிள்ளை. மீன்பிடி இலாகா பரிசோதகர்.
> **ஆஞ்சலா:** அவரது மனைவி. ஆங்கில ஆசிரியை.
> **கார்மெலா:** கடைசிப் பெண். கனிஷ்ட வகுப்பில் பயிலுகிறுள்.
> **அம்மா:** இல்லத்தரசி.
>
> ... ... ... ... ...
>
> **சுவைமிகுந்த கத்தோலிக்கசெய்திகட்கு உல்லாசவேளையைத் தவருது படியுங்கள்**

அஞ்சலா: இலங்கையரைப்பற்றி இங்கிலாந்திலிருந்து வெளியாகும் பத்திரிகையிலா?

பெரியண்ணு: ஆம். இவர் ஓர் ஆசிரியர். இங்கிலாந்திலிருந்து வெளியாகும் கத்தோலிக்க பத்திரிகைகளில் சிலவற்றையாவது பெற்றுப்படிக்க ஆவல் கொண்டார். எனவே, ஒரு சிறுகடிதத்தை அப்பத்திரிகைகட்கு வரைந்தார். இங்கிலாந்தில் வெளியாகும் எல்லாக்கத்தோலிக்க வாரஏடுகளும் அக்கடிதத்தைப் பிரசுரித்தன. முடிவு? இங்கிலாந்திலிருந்து ஏராளமான கத்தோலிக்க பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இந்தஆசிரியருக்கு வரத்தொடங்கிவிட்டன. நன்மனங்கொண்ட பல ஆங்கிலேயர் தாம்வாசித்துமுடித்த பத்திரிகைகளைத் தவருது அனுப்புவதாக வாக்குப்பண்ணினர். எனவே, ஆசிரியர் ஒரு இலவசநூல்நிலையத்தை ஆரம்பித்தார். மெசஞ்சர் சஞ்சிகைமூலம் இதுபற்றித் தெரிவித்தார். அஞ்சற்செலவுக்காகப் பணம் அல்லது தபால்தலைகளை அனுப்புவோருக்கெல்லாம் இலவசமாகக் கத்தோலிக்க சஞ்சிகைகளை அனுப்பிவருகிருர். இந்தநூல்நிலையம் ஒன்றரைவருடகாலமாகப் பணியாற்றிவருகிறது.

அப்பா: ஒருவரிகூடவிடாமல்வாசிக்கக்கூடிய பத்திரிகைஎன்றும் இதைக் குறிப்பிடலாம். கத்தோலிக்கரல்லாதார் திருச்சபையைப்பற்றிஅறியவிரும்பும் சந்தேகங்கட்கெல்லாம் தகுந்தமுறையில் பதிலளிக்கப்படுகின்றது. நம் கத்தோலிக்கமதத்தில் அவ்வப்போது சேர்ந்துகொள்வோர்பற்றியசுவையான தகவல்களைத் திறந்தவாயில் என்றபகுதியில்காணலாம். இதே பகுதியைத் தானே பாதுகாவலனில் இருளில்ஒளி என்றதலைப்பில் தமிழாக்கம்செய்து தருகிருர்கள்.

கார்மெலா: இருளில் ஒளி மிகநல்ல பகுதி. எங்கள் கலாசாலையில் அதைத் தவருமல் வாசித்துவருகிறோம்.

பெரியண்ணு: வேறுபல சுவையான அம்சங்களும் கதலிக் டைஜஸ்ட் சஞ்சிகையில் வெளியாகின்றன. வாசிப்பதற்கு மனோகரமான அந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமிழாக்கம்செய்து பிரசுரிப்பது மிகநல்லது.

அகஸ்ரின்: இச்சஞ்சிகை ஆங்கிலம், பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து, இத்தாலியமொழிகளில் பத்துப்பதிப்புகளில் வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகையை விற்பனைசெய்வதற்கென்றே அமெரிக்காவின் பெரியநகரங்களிலும், ஆலயங்களிலும் விசேட நிலையங்கள் உண்டு. இல்லறத்தவர்சிலரால் வெளியிடப்படினும் ... சிலகுருமார்களே பதிப்பாசிரியர்களா...

நிர்மலா: இது நல்லதோர் முயற்சி ஆமாம், இந்நிலையத்திலிருந்து இலவசமாகப் பத்திரிகைகளைப் பெறவிரும்புவோர் என்னசெய்யவேண்டியது?

பெரியண்ணு: பிறநாடுகளில் வெளியாகும் ஆங்கில கத்தோலிக்க சஞ்சிகைகளைப் பெறவிரும்புவோர் பாதுகாவலன் நிர்வாகிக்கு எழுதுவதன் மூலம் இந்நூல்நிலைய அதிபருடன் தொடர்புகொள்ளலாம்.

கார்மெலா: ஏன் பெரியண்ணு? கிறிஸ்தவ ஒற்றுமை என்பது கத்தோலிக்கரல்லாதாரும் திருச்சபையில் இணையவேண்டுமென்பதுதானே?

பெரியண்ணு: ஆம். கிறிஸ்தவ ஒற்றுமைக்காகச் சென்றவாரத்தில் சிறப்பாகப் பிரார்த்தித்தோமல்லவா? இடைக்காலத்தில் சில சிறுகாரணங்களின் பயனுக ஒரு பகுதியினர் கத்தோலிக்க திருச்சபையின் தலைமையினின்றும் பிரிந்துவிட்டார்கள். கிறிஸ்துவைத் தலைமையாகக்கொள்ளும் அச்சகோதரர்கள் பேரளவில் மட்டுமன்றிச் செயலளவிலும் எம்முடன் இணையவேண்டுமென்பதற்காக நாம் பிரார்த்தித்தோம். அடுத்த வத்திக்கான் திருச்சங்கத்திலும் இந்த ஒற்றுமைக்குச் சாத்தியமான கூறுகள்பற்றி ஆராயப்படும்.

அகஸ்ரின்: அண்மையில் அமெரிக்க சர்வகலாசாலையொன்றில் கடமையாற்றும் கத்தோலிக்க குரவரொருவர் கிறிஸ்தவ ஒற்றுமைக்கு குந்தகத்தை விளைக்கக்கூடிய இருதடைகளை எடுத்துக் காட்டியிருக்கிருர். திருச்சபையின் ஒற்றுமைபற்றி அணுஅணுவாக ஆராய்ந்திருக்கிருர் இப்பேராசிரியர்.

அப்பா: அவர் என்ன பிரச்சனைகளைக் குறிக்கின்ருர்?

அகஸ்ரின்: ஒன்று பாப்பரசரின் வழுவாவரம். திருச்சபையின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் கட்டுக்கோப்புக்கும் இன்றியமையாதது பாப்புவின் தலைமை. மற்றது மரியாயின் பிரச்சனை. கத்தோலிக்கராகிய எமக்கு மரியன்னை தேவனுக்கு அடுத்தபடியாக, அவர்தம் திருத்தாயாராக, தேவனிடத்தில் அதிகவல்லமையுள்ளவளாக, எங்கள் பிரதிநிதியாக விளங்குகிருர். ஆயின் மற்றைய கிறிஸ்தவர்கட்கோ அவர் சாதாரண மரியாய்தான். இந்த இரண்டு பிரச்சனைகளிலும் கத்தோலிக்கதிருச்சபையின் போதகங்களையும் கோட்பாடுகளையும் அவர்கள் விளங்கிக்கொள்வது வில்லங்கம்தான்.

அம்மா: அவர்கள் இக்கொள்கைகளைச் சரிவர விளங்கி எங்களுடன் சேர்ந்து கிறிஸ்துவின் உண்மையான வேதத்தில் வாழ்ந்துவரவேண்டுமெனத் தவருது மன்ருடிவருவோமாக.


**வளரும் தமிழ்வரிசை நூல்கள்**

பாடநூற் பிரசுரசபையால் பாடப்புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டவை.

ஆக்கியோன்: ஆசிரியபண்டிதர் க. யோ. ஆசிநாதன்

1-ம்புத்தகம் 6-ம்வகுப்புக்கு 1-30
2-ம் ,, 7-ம் ,, 1-75
3-ம் ,, உயர்வகுப்புகளுக்கு 2-75


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday February 4-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org